உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 27 ] கீலக - ஆனி - 10—7—68 [ இதழ் 8

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## பெருஞ்சாந்தி

மனிதன் வாழ்கின்றான்; மற்ற உயிர்களும் வாழ்கின்றன. ஆனால் மனிதன் மன உணர்வோடு, வாழ்கின்றோம் என்ற உணர்வோடு வாழ்கின்றான். மற்ற உயிர்கட்கு இந்த உணர்வில்லை. ஏதோ வாழ்கின்றன; வளர்கின்றன; மடிகின்றன. இம் மனித வாழ்வு இலட்சியம் ஒன்றோடு அமைதல் வேண்டும். இலட்சியம் ஒன்றைக் குறித்துக்கொண்டு அதை நோக்கி வாழ்வைச் செலுத்துதல் வேண்டும். அந்த இலட்சியம் அழியாததாய், என்றும் உள்ளதாய், இன்பம் பிலிற்றுவதாய், தூயதாய், செவ்வியதாய் இருத்தல் வேண்டும் என்று கூறுகிறது சமயம்.

இவ்விடத்துச் 'செம்பொருள் காண்பது அறிவு' என்னும் திருக்குறள் தொடரும், அதற்கமைந்த பரிமேலழகரது பண்பட்ட உரைப் பகுதியும் நினைவிற்கு வருகின்றன. இந்த இலட்சியத்தை எட்டிப்பிடிக்காதவரை மனிதனுக்கும் மற்ற உயிர்கட்கும், குறிப்பாக விலங்குகட்கும் வேற்றுமை இல்லை என்றே கூறலாம். இந்த இலட்சியத்தைத் தேடித் திரிய வேண்டிய பெருங்கவலையையும்கூட மனிதனுக்கு விட்டுவைக்கவில்லை நம் சான்றோர். அவர்கள் பட்டுக் கெட்டு, ஆடி அலைந்து, ஓடி இளைத்து ஒருநெறிப்பட்டு அரிதிற்கண்ட அநுபவம் நம்முன் இருக்கிறது. திருமுறையாய், திவ்வியபிரபந்தமாய், விவிலியமாய், வேதமாய், அங்கமாய் வேறுபல சமயக் கருத்துக் கருவூலமாய் விளைந்திருப்பதெல்லாம் இந்த உயர் அநுபவமே.

இந்த அநுபவங்களை அறிந்துதான் தன் வாழ்வை மனிதன் உயர்த்திக் கொள்ளவேண்டியவனாயிருக்கிறான். அவ்வநுபவங்களைப் புறத்தே கண்டுணரத் திருக்கோயிலும் பிறசாதனங்களும் அமைந்திருக்கின்றன. திருக்கோயில் முதலிய சாதனங்கள் ஜீவன்முத்தர்களாக உள்ளவர்களுக்கும் தேவை என்கின்றது சிவஞானசித்தியார்.

" மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே "

இத் திருக்கோயில் வழிபாடு செம்மையாக நடைபெற்றால்தான் உலகுவாழும்; உலகில் எல்லாம் ஒழுங்குற நிகழும். " முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடில் மன்னர்க்குத் தீங்குள; வாரி வளம் குன்றும்" என்று எச்சரிக்கை செய்கின்றார் திருமூலர். எனவே ஆட்சிச் சிறப்பிற்கும் வருவாய்ப் பெருக்கிற்கும் திருக்கோயில் வழிபாடு எவ்வளவு இன்றியமையாதது என்று விளங்கும்.

இத் திருக்கோயில் வழிபாட்டின் தொன்மையும் நன்மைகளும் நம் இலக்கியங்களானும் நமக்கு இனிது விளங்குவதாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையே சிறந்த திருக்கோயில் பலவற்றுள்ளும் நாட்பூசனைகளும், சிறப்புப் பூசனைகளும் நடைபெறுவதற்கான நிவந்தங்கள் பல பெருமன்னர்களால் நிறுவப்பெற்றுள்ளன. அவைபற்றிய கல்வெட்டுக்கள் அக்கால அரசர்கள் திருக்கோயில் சிறப்பே தம் ஆட்சிச் சிறப்பிற்கு அடிப்படை

என்பதை நல்லவண்ணம் உணர்ந்திருந்த அருமையை எடுத்துக் காட்டுகின்றன.

தமிழகத்துத் திருக்கோயில்களில் நடைபெற்றுவரும் திருவிழாக்கள், அவற்றின்போது எழுந்தருளுவிக்கவேண்டிய அருட்டிருமேனிகள் பற்றிய பல குறிப்புக்களும் கல்வெட்டுக்களில் கூறப்பெற்றுள்ளன. கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தப் பிள்ளையாரது திருமயிலைத் திருப்பதிகம் திருக்கோயில் திருவிழாக்கள் பலவற்றைத் தொடர்ந்து கூறி, அவற்றின் அருமை பெருமைகளை எடுத்துப் புகழ்ந்து, அவற்றையெல்லாம் காணாது சென்ற பூம்பாவையின் பொருட்டு இரங்குதற் குறிப்பான் அமைந்தது. இதன்கண் உருத்திரகணத்தார்க்கு அட்டிட்டல் (புரட்டாசி), ஓணவிழா (ஐப்பசி) விளக்கீடு (கார்த்திகை), ஆதிரை (மாரகழி), பூசம் (தை), நடமாடல் (மாசி), உத்திரநாள் ஒலிவிழா (பங்குனி), அட்டமிநாள் (சித்திரை), பொற்றுப்பு (வைகாசி), பெருஞ்சாந்தி (ஆனி) ஆகிய விழாக்கள் ஓதப்பெற்றுள்ளன. இவற்றுள், புரட்டாசி, மாசி, சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய திங்கட் பெயர்கள் கூறப்பெறவில்லை. கூறியுள்ள வரிசையில் இத்திங்கட் பெயர்கள் இடையிடைக் கொள்ளத்தக்கவகையில் அமைந்திருக்கின்றன. எனவே இத் திருப்பதிகத்திற் கூறப்பெற்ற திருவிழாக்கள் தமிழ் ஆண்டின் நடுவண் அமைந்த பத்துத் திங்கட்கும் உரிய வகையில் நிகழ்கின்ற மெய்ம்மை அறிந்துணரத்தக்கதாகும்

"உரிஞ்சாய வாழ்க்கை அமண் உடையைப்போர்க்கும்
இருஞ்சாக் கியர்கள் எடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம் அமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்" (பா. 10)

என்பதில் வரும் பெருஞ்சாந்தி என்பது குடமுழுக்கு விழாவாகக் கொள்ளத்தக்கதென்பர். இப்பெருஞ்சாந்தியாம் குடமுழுக்கு அவ்வப்போது நிகழ்ந்துவருதலே நாட்டின் நன்மைக்கு அடிப்படையாம். மறவாது பெருஞ்சாந்தி விழாக்களைத் திருக்கோயில்கள்தோறும் நிகழ்த்திவருதல்வேண்டும். இறையருளைப் பெறுவதற்கும், இறையருளைக் கலை வடிவில் வடிப்பதற்கும், கலைப்பணிகள் வாயிலாக மக்கட்சமுதாயத்தைப் புராண வரலாற்றுச் சிறப்பை அறிவுறுத்துவதற்கும் திருக்கோயில் திருப்பணி

களும் அவற்றது நிறைவில் மகாகும்பாபிடேகப் பெருஞ்சாந்தியும் இன்றியமையாதன.

தருமையாதீனம் 25 ஆவது குருமாமணியாய் அருளாட்சி புரிந்துவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்கள் திருக்கோயில் திருப்பணிகளைக் கனவிலும மறவாது அவ்வப்போது புரிந்தருளி அதில்திறப்பாடும் வெற்றியும் கண்டு வருபவர்கள். அவர்கள் செய்வித்த மகா கும்பாபிடேகங்களில் 5–7–1968 இல் திருப்பனந்தாள் ஸ்ரீ செஞ்சடையபபர் திருக்கோயிலுக்குச் செய்த திருக்குடமுழுக்குப் பெருஞ்சிறப்புப் பெற்றுவிட்டது.

திருப்பனந்தாள் 'கண்பொலி நெற்றியினன்' என்று தொடங்கும் திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்ற சிறப்புடையது. தாடகை வழிபட்ட சிறப்பும், குங்குலியக்கலயரது அன்பிற்குப் பெருமான் தலை நிமிர்ந்த மாண்பும் உடையது. வரலாற்றுச் சிறப்பும், புராணச் சிறப்பும் வாய்ந்தது. இத் திருத்தலத்துப் பழங்கோயில் திருப்பணிகளால் திகழ்வுற்றுப் புதுவடிவம் கொண்டது; புதிய சுதை வடிவங்கள் அமைந்தன; இராஜகோபுரம் எழில்பெற்றது. சிற்பங்கள் வண்ணமும் சுண்ணமும் வனப்புறப் பொருந்தின, திருப்பணி நிறைந்து, மகாகும்பாபிடேகப் பெருஞ் சாந்தியை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் முன்னின்று நடத்துவித்தார்கள். ஆயிரக் கணக்கான மக்கள் கண்டு வழிபட்டுக் கண்பெற்ற பயன் பெற்றுக் களிகூர்ந்தார்கள். ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் மகாகும்பாபிடேக மாண்புறு நிகழ்ச்சியிற் கலந்து மகிழ்ந்தும் மகிழ்வித்தும் திகழ்ந்தார்கள்.

சுருங்கக் கூறினல் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் கருணையொடு குழைந்த இப்பனசைப் பெருஞ்சாந்தி, பாருக் கெல்லாம் பெருஞ்சாந்தியும், பேரானந்தமும் விளைப்பதாய் அமைந்துள்ளது. உலகிடை அமைதியும் இன்பமும் ஓங்கிட இத்தகு மகாகும்பாபிடேகங்கள் தமிழ்நாட்டுத் தலங்கள் தோறும் நிகழ்ந்திடல்வேண்டும். மனித சமுதாயம் அவற்றைக் கண்டுகண்டு அருளைப் பெருக்கிடல் வேண்டும். வாழ்வின் இலட்சியத்தை மனிதன் புரிந்துகொண்டு பிறழாது வாழ்ந்திட இத்தகு நல்விழாக்களே நற்றுணை புரிந்திடும்.

உ

குருபாதம்

குருவருள்

# அறநெறியும் அருள்நெறியும்

## "வேண்டுதல் வேண்டாமை இலான்"

தனக்கென ஒரு வடிவம் இல்லாதவனாகிய இறைவன். அன்பால் நினைவார் நினைந்த வடிவோடு அவரது உள்ளக் கமலத்தில் விளங்குவான் என்பதை, 'மலர்மிசை ஏகினான்' என்னும் பெயரால் குறித்த திருவள்ளுவர் பின் இறைவனை, 'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்னும் பெயரால் குறிக்கின்றார்.

'வேண்டுதல்' என்பது, தன்னிடத்தில் இல்லாத பொருளைத் தனக்கு இன்றியமையாததாகக் கருதி அதனைப்பெற அவாவுதல். அன்றியும், தன்னிடத்து உள்ள பொருளைத் தனக்கு இன்றியமையாததாகக் கருதி அதன்கண் பற்றுச் செய்தலும் வேண்டுதலேயாம். இவ்விரண்டும் 'விரும்புதல்' என்பதன் கண் அடங்கும். இனி, வேண்டாமை' என்பது இங்கு எதிர்மறையை உணர்த்தாமல் மறுதலையை உணர்த்துகின்றது. அஃதாவது, 'வேண்டாமை' என்பது 'விரும்பாமை' என்று பொருள் தாராமல், விரும்புதலுக்கு எதிராய வெறுத்தலைக் குறிக்கிறது. வெறுத்தலாவது ஒரு பொருள் தன்னை அணுகுவதாயினும், அல்லது தன்னிடத்து உள்ளதாயினும் அதனால் தனக்குத் தீங்கு வருவதாகக்கருதி அதனைத் தன்னிடத்து வாராதபடி தடுத்தல் அல்லது அதனை அப்புறப்படுத்துவது. 'இவ்விரண்டு தன்மையும் இல்லாதவன் இறைவன்' என்பதை, வேண்டுதல் வேண்டாமை இலான்' என்னும் பெயரால் குறிக்கின்றார் திருவள்ளுவர்.

அஃதாவது, 'யாதொரு பொருளையும் இஃது எனக்கு இன்றியமையாதது என விரும்புதலோ அல்லது இஃது எனக்கு ஆகாதது என்று வெறுத்தலோ இறைவனுக்கு இல்லை' என்பதாம்.

ஆறறிவு படைத்த மக்கள் முதல் ஓரறிவு படைத்த தாவரங்கள் ஈருக எல்லா உயிர்களிடத்தும் நாம் இந்த இரண்டையும் தவருது காண்கின்ருேம். ஒன்றல்ல; இரண்டல்ல; எத்துணையோ பொருள்களே ஒவ்வோர் உயிரும் விரும்புகின்றது; வெறுக்கின்றது. விரும்பிய பொருளே அடைவதற்கும், வெறுக்கின்ற பொருளே அகற்றுவதற்கும் எண்ணுகின்ற எண்ணங்களே 'கவலே' எனப்படுகின்றது. உயிர்கள் விரும்புகின்ற பொருளும வெறுக்கின்ற பொருளும் அளவுடையனவாயின், அவைபற்றி அவ்வுயிர்கட்கு உண்டாகின்ற கவலேக்கும் அளவிருக்கும். அப்பொருள்கட்கு அளவில்லாமையால் அவைபற்றி எழுகின்ற கவலேக்கும் அளவில்லாமல் இறுதிகாறும் உயிர்கள் கவலேயிலேயே அழுந்தி ஒழிய வேண்டுவதாகின்றது.

' ஒருபொழுதும் வாழ்வ தறியார்; கருதுப
கோடியும் அல்ல பல "

என்று மற்ருேரிடத்தில் திருவள்ளுவரே கூறுகின்ருர். ஔவையாரும் 'மக்களாயினும் அவர்கள் உண்பதற்கு ஒரு நாளேக்கு வேணடுவது நாழியரிசி; உடுப்பதற்கு வேண்டுவது நான்குமுழ ஆடை. இந்த அளவில் தங்கள் கவலேயை நிறுத்திக்கொள்ளாமல் அளவில்லாத பொருளே விரும்பியும், வெறுத்தும் ஏன் கவலேப்பட்டுக் கழிகின்ருர்கள்' என்று இரங்கும் நிலேயில்,

" உண்பது நாழி; உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினேந் தெண்ணுவன — கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணேயும் சஞ்சலமே தான் "

என்ற வெண்பாவைக் கூறியுள்ளார். இதில் அவர் இவ்வாறு கவலேயுறும் மக்களே 'கண்புதைந்த மாந்தர்' அஃதாவது, 'அறிவுக் கண்ணே இழந்த மக்கள்' என்று குறிப்பிடுதலேக் காணலாம். எனவே 'அறிவாகிய கண் திறக்கப்பட்டால் இந்தக் கவலேக்கே இடமில்லே' என்பது புலனுகின்றது.

கண்புதைந்த மாந்தர் குடிவாழ்க்கைக்கு அவர் கூறிய உவமை மண்ணின் கலம். மண் பாத்திரத்தை வாங்கிவிட்டால் அஃது உடையும் வரையில் கவலேதான். மண் பாத்திரத்தைக் கையாளும் பொழுது மிகவும் விழிப்பாகக் கவலேயோடே கையாளவேண்டும். எவ்வளவு கவலேயோடு, விழிப்போடு

கையாண்டாலும் சிறிது தவறு நேர்ந்து அஃது உடைந்து போதல் இயற்கை. பொற்கலத்தை வாங்கிவிடுவோமாயின், சிறிதும் கவலையின்றி அதனைக் கையாளலாம். ஆகவே மக்கள் தங்கள் வாழ்க்கையை மட்கல வாழ்க்கையாகச் செய்யாமல் பொற்கல வாழ்க்கையாகச் செய்துகொள்வதே அறிவுடைமை யாகும். அஃதாவது விருப்பு வெறுப்புக்களை அளவின்றிக் கொள்ளாமல் ஓரளவிலேனும் நிறுத்திக்கொள்ளுதல் வேண் டும். இதற்கு வேண்டுவது மெய்யறிவு.

எல்லா உயிர்களிடத்தும் விருப்பு வெறுப்புக்கள் சிறிதா யினும் காணப்பட, இறைவனிடத்து அவை ஒரு சிறிதாயினும் இல்லாமைக்குக் காரணம் என்ன? அவன் பிறிதொரு பொரு ளால் நிரப்பப்படும் குறைவிலனாய் இருப்பதே காரணம். ஒருவர் ஒரு பொருளை விரும்புதற்குக் காரணம் அவர் அப் பொருளால் வரும் நிரப்பப்படும் குறையுடைமையேயாம். ஒரு பொருள்மேல் விருப்பம் உண்டாகுமாயின், அதன் மறுதலையாய பொருள்மேல் வெறுப்பு உண்டாதல் இயற்கை. இறைவன் யாதொருபொருளால் நிரப்பப்படும் யாதொரு குறையும் இலன், ஆதலின் யாதொரு பொருளை விரும்புதலும் அவனுக்கு இல்லை. விரும்பப்படும் பொருள் இல்லையாகவே, அதன் மறுதலைப் பொருளை வெறுத்தலும் அவனுக்கு இல்லை. விருப்பு வெறுப்புக் கள் இல்லையாகவே அவைபற்றி எழும் பல்வகை எண்ணங் களாகிய கவலையும் அவனுக்கு இல்லை.

ஒரு பொருளால் நிரப்பப்படும் குறையுடையவர்க்கு அத னால் வருவது துன்பமே. அக்குறை இல்லாதவர்க்கு உளதாவது இன்பமே. எனவே, குறை ஒன்றும இல்லாதவனாகிய இறை வன், நிறைந்த இன்பமே வடிவாய் இலங்குகின்றான். இன் பத்தை வரையறுக்கும் எல்லை துன்பமேயாதலின், துன்பமே இல்லாத இறைவனது இன்பம் வரம்பில் இன்பம் ஆகின்றது. எனவே, இந்த வரம்பில் இன்பமாகிய குணத்தையே திரு வள்ளுவர் 'வேண்டுதல் வேண்டாமை இலான்'' என்னும் பெயரால் குறித்தார். வரம்பில் இன்பம்' என்பதும்' 'பேரின்பம்' என்பதும் ஒன்றேயாதல் தெளிவு. இறைவன் பேரறிவும், பேராற்றலும், பேரருளும் உடையனாய் இருத்தல் போலப் பேரின்பமும் உடையவன்' என்பது இதனால் விளங்கு கின்றது.

உயிர்கள் இங்ஙனமின்றி இன்னல் உறுதற்குக் காரணம், அவை சிற்றறிவும் சிறிதாற்றலும் உடையனவாய் இருத்தலும், அச்சிற்றறிவும் சிறிதாற்றலும் ஆணவ மலத்தால் மறைக்கப் பட்டு அவைகளை இழந்து நிற்றலுமேயாகும். எனவே, உயிர்கள் இத்துன்பம் நீங்கி நிறைந்த இன்பத்தைப் பெறவேண்டுமாயின், அவ்விறைவன் திருவடியையே அடைதல் வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். அதனையே திருவள்ளுவர்,

"வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்
கியாண்டும் இடும்பை இல"

என்று அக்குறளிலே குறித்தார். 'இறைவன் வேண்டுதல் வேண்டாமை இலான்' என்பதனைத் திருநாவுக்கரசரும்,

"வேண்டாமை வேண்டுவது இல்லான் தன்னை"
(திருமுறை - 6-46-9.)

என்று அருளிச்செய்கின்றார்.

'குறைவிலா நிறைவேகுணக் குன்றே" (திருமுறை-7.)

என்று சுந்தரரும்,

"குறைவிலா நிறைவே கோதிலா அமுதே"
(திருவாசகம் 22-6.)

என்று மாணிக்கவாசகரும் இறைவனை, "குறைவிலா நிறைவு" என அருளியது, 'அவன் எத்தகைய குறையும் இல்லாத நிறைந்த நலம் உடையவன்' என்னும் கருத்தினாலேயாகலின். அவனது வரம்பில் இன்பமும் அதனுள்ளே அமைந்து கிடப்பதாம். "சிவன்" என்பதற்கு 'நிறைந்த மங்கலமுடையவன்' என்பதே பொருள் என்பதை,

"குறைவிலா மங்கல குணத்த னாதலின்
... ... ... ... ...
அறைகுவர் சிவனென அறிவின் மேலவர்"

எனக் காஞ்சிப் புராணம் கூறுகின்றது. எனவே, 'சிவன்' என்பதும் சிறப்பாக, 'நிறைந்த இன்பத்தையுடையவன்' என்பதையே குறிப்பதாகும். இதனால் அறநெறியிலும், அருள் நெறியிலும் இன்பப்பொருள் இறைவன் ஒருவனே எனக் கூறப் படுதலை யறிந்து அவனது அடியைச் சேர்ந்து யாவரும் இடும்பையின்றி வாழ்வார்களாக.



தாடகை பூசித்தல்



தாடகை பதினறு கைகள் அருளப் பெற்றமை

# கண்ணீரில் மலர்ந்த கவிதை

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

**திரு. சொ. சிங்காரவேலன்** M. A., Dip. Ling.

பூக்கின்ற உலகமெல்லாம்
புன்னகை செய்தே நின்று,
காக்கின்ற கருணைச் செல்வா,
கனிந்திடும் அருளின் கூத்தே,
நாக்கின்றுன சீரைப் பாட
நற்றவம் புரிந்த தென்பேன்
யாக்கின்ற கவலை போக்கி
யாங்கணும் இன்பம் சேர்ப்பாய்! (1)

நெஞ்சத்தில் ஒளியைப் பாய்ச்சி
நினைவெலாம் நீயே யாகி,
வஞ்சத்தின் வீழ்ந்தி டாமல்
வாய்மையில் வழுவி டாமல்
செஞ்சொல்லில் திறம்பி டாமல்
சீர்த்தியிற் புலப்ப டாமல்
நஞ்சொத்த துயர்ப்ப டாமல்
நாயக! காத்தி டாயே. (2)

கற்பனைக் கெட்டா வித்தே,
காரிய கார ணங்கள்,
சொற்பொருட் கெட்டா வாழ்வே,
சுத்தமாம் தூரியத் துள்ளே
பொற்புறப் பொலிந்து தோன்றும்
பூரணப் பொருளே, உன்னை
அற்பனேன் பாடற் குள்ளே
அகப்படுத் திடவோ, வெட்கம்! (3)

பொய்ம்மையே என்றன் வாழ்வு;
பொய்ம்மையே என்றன் வார்த்தை;
பொய்ம்மையே என்றன் தொண்டு;
பொய்ம்மையே என்றன் போக்கு;

பொய்ம்மையே என்றன் உள்ளம்;
பொய்ம்மையே என்றன் அன்பு;
மெய்ம்மையே! மெய்ம்மைச் சோதி!
மேனிலை எனக்கும் உண்டோ? (4)

பன்னூல்கள் படித்தாற் போலே
பகட்டுவேன்; சொல்லினாலே
முன்னூல்கள் மேற்கோள் காட்டி
முனைப்பினால் நிமிர்ந்து நிற்பேன்;
தென்னூலில் வல்லான் போலே
தினமொரு மறை விரிப்பேன்;
எந்நூலில் வல்லேன் யானும்?
எண்ணினால் நாணம் கொள்வேன். (5)

ஊருக்கு முன்னால் என்னை
உயர்த்தவே வேடம் கொள்வேன்;
சீருக்குச் சேயேன் யானும்;
சிறுமையே பெருகி நிற்பேன்!
நீருக்குக் குளிர்வும், தீக்கு
நீளனற் சேர்க்கை தானும்
பாருக்கிங்கி ருப்பும் தந்த
பரமனே! என்னைக் காவாய்! (6)

மாசுற்ற நெஞ்சுக் குள்ளே
மலிந்திடும் சிறுமைக் குப்பை;
தேசுற்ற வேடம் காட்டித்
திகைப்பிக்கும் வார்த்தைக் கூட்டம்!
காசுற்ற பேருக் கென்றால்
கரங்குவித் தஞ்ச லிக்கும்;
ஏசுற்ற இயல்பிற் கெல்லாம்
எளியேன்றன் பண்பென் பேனே. (7)

ஒருகணம் தெளிவு கூடும்;
உண்மையை உள்ளம் நாடும்;
மறுகணம் பேத லித்தே
மனமந்தச் சிறுமை நாடி

திருகுறும்; பண்பில் லாமல்
திருட்டறி வதனைக் கூடி
மறுகிடும்; எந்த நாளில்
மாசிலா மணி, நீ யாள்வை? (8)

உடனிலை ஒருபால் துன்பம்;
உளநிலை மறுபால் துன்பம்;
திடமிலா அறிவும் துன்பம்;
தெளிவிலா உணர்வும் துன்பம்;
கடன்முறை யாற்றுங் காலும்
கற்றவாக் கூடுங் காலும்
அடடா வித் துன்பம், துன்பம்!
அருளினுற் றடைத்திடாயே. (9)

நிலையாத உலகம் ஓடி,
நெடுவானிற் கரையும் நாட்கள்;
நிலையாத இளமை வாடி
நெளிந்திடும், மூச்சுக் காற்று!
நிலையாத செல்வம் கூடி
நெடுமூச்சைப் பரிசளிக்கும்!
நிலையாத உடலுக் குள்ளே,
நீயன்றோ அழிவிலாதான்! (10)

அப்பாநீ என்கு வேனோ?
ஐயனே என்பேனோ நான்!
தப்பாத நெஞ்சந் தந்து
தவறாத வார்த்தை ஈந்து
எப்பாரும் கலங்கினாலும்
இதயத்திற் கலங்கிடாத
துப்புடை வலிவும் தந்து
தூயனே, காவென்பேனோ? (11)

பாட்டினால் உன்னைப் பாடப்
பாவித்தேன் ஆனாலும் என்
பாட்டிலே பொழுதைப் போக்கிப்
பஞ்செனப் பறக்கவிட்டேன்

கேட்டிலே சிந்தை போகக்
கிளைஞரைச் சதமென் றெண்ணித்
தேட்டிலே நெஞ்சம் போக்கித்
திகைக்கின்றேன் திகைக்கின் றேனே. (12)

பணத்திற்கே அன்பு காட்டும்
பயனிலா மாந்த ரெல்லாம்
கணத்திற்குக் கணமென் நெஞ்சைக்
கசக்குவார்; கலங்க வைப்பார்;
மணத்திற்கு மலரை நாடி
மதுவுண்டு பறந்து போகும்
கணத்திற்கும் இவர்க்கும் என்ன,
கணக்கிலே வேறுபாடு? (13)

உழைப்புக்கு மதிப்பைத் தந்தே
உண்மைக்குப் பரிச ளித்துப்
பிழைப்புக்கு வழியைக் காட்டிப்
பெருமைக்குட் செலுத்து கின்ற
தழைப்புடைச் சமுதா யத்தைத்
தமிழகம் மட்டு மின்றி
அழைக்கின்ற கடல்சூழ் பாரின்
அகமெல்லாம் காண வேண்டும். (14)

எந்தையே! நெஞ்சிற் பட்ட
எதனையும் கூறத் திட்டச்
சிந்தையில் துணிவு காட்டச்
சிறக்கின்ற பண்பு மேவ
விந்தையே ஆயினும், என்
விண்ணப்பம் மறுக்கா தே, யான்,
கந்தையே கட்டினாலும்
கருத்திலே பொருத்த வேண்டும். (15)

இறப்பொரு நாளில் என்னை
இதமுறத் தழுவும்; உண்மை!
'உறைப்புடன் இவனும் வாழ்ந்தான்,
உரையினில் செயலில் எல்லாம்

கறையின்றி வாழ்வில் வெற்றி
கண்டனன் ; துஞ்சினன் ' என்
றறைந்திட மடிவே னேல்யான்
அதனையே சொர்க்கம் என்பேன் ! (16)

அடுத்தொரு பிறப்புண்டானல்,
அஃதெனக் குரித்தா மானல்
' கொடுத்திடும் வள்ளல் ; யார்க்கும்
கொடுப்பதில் இணையிலாதான்,
விடுத்திடும் அறிவுச் செல்வன்
வித்தகன். கனிந்த நெஞ்சின்
மடுத்துயர் பண்பின் செல்வன் '
எனும்புகழ்ப் பிறப்பு வேண்டும் ! (17)

ஞாலத்தின் இயல்பு நோக்கி
நானிங்கே ஒதுங்கி நிற்பேன் ;
சீலத்தின் வழுவி னோர்கள்,
சிந்தையில் இருள்கொண் டோர்கள்
மூலத்திற் குறைவுள் ளோர்கள்
மூதறி வனைத்தும் இல்லோர்
ஓலத்திற் புதைபட்டுள்ள
உலகத்தில் ; எளியேன் எங்கே ? (18)

நல்லவர் நடுங்கி நோக,
நனிமிகு பண்பி னோர்கள்
தொல்லவர் நெறியே பேணித்
தொண்டினை அடங்கிச் செய்ய,
அல்லவர் மேம்பட் டெங்கும்
ஆர்ப்பினைச் செய்வர், அந்தோ !
பல்லவர் பழிப்புக்குள்ளே,
பண்பிங்கே செழிப்ப தெங்கே ? (19)

அந்நாட் பனுவல் எல்லாம்
ஆண்டவன் அவதா ரத்தை
முந்துற விளக்கிச் சொல்லும் !
முத்துப்போல் தூய்மை யானே !

சிந்தனை பெருகி வாய்மை
நெறியினிற் கோட்டம் புக்க
இந்நாள் போந்திடாயோ,
இன்னும்நாள் போக்க லாமோ? (20)

அறநெறி பிறழ்வோர் தம்மை
அச்சுறுத் திடுத லோடு
மறநெறி காட்டிப் போக்க
மாண்பூத சதுக்கம் இன்று
உரமுற இந்த நாட்டில்
ஒன்றில்லை; ஐயா! நீயே
அறவனாய்ப் போந்தா லன்றி
அறத்திற்குப் பிழைப்பே இல்லை. (21)

பண்டைநாட் குருகு லத்தில்
படிப்பினால் பண்பு மேவித்
தொண்டெலாம் புரிந்து வாழ்வில்
துகளிலாக் கல்வி கற்றுக்
கண்டவர் போற்ற வாழ்ந்தார்
கலைபயில் வோர்க ளெல்லாம்;
கொண்டவென் மனத்துத் துன்பக்
குமுறலே இந்த நாளில்! (22)

(தொடரும்)

## EXTRACT FROM THE VISITORS' BOOK


Dharmapuram Adhinam

**Sri Amirthagadeswaraswami Devasthanam, Tirucadaiyur.**


A visit to this temple becomes an everlasting impression in the mind. It is because of the splended arrangements for the worship provided by the Devasthanam authorities and above of the clean atmosphere of the temple. We are indeed much indepted to this Devasthanam for having given in this golden opportunity. We had indeed spent a holy time.

(Sd.) R. S. Chari,
Pay & Accounts Officer, Pondicherry.
8—6—68.

## திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேஸ்வரசுவாமி தேவஸ்தானம்:




தட்சிணமூர்த்தி ( சுதை )



பஞ்சமூர்த்திகள் ( சுதை )

## திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேஸ்வரசுவாமி தேவஸ்தானம்:



பெருமானை நிமிர்த்த அரசன் சேனைகளைக்கொண்டு முயற்சித்தல்



குங்குலியக்கலயர் கழுத்தில் கயிறு பூட்டி நிமிர்த்தல்

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேஸ்வரசுவாமி தேவஸ்தானம்:



கஜசம்ஹாரர் (சிற்பம்)

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேஸ்வரசுவாமி தேவஸ்தானம்;



ஊர்த்துவதாண்டவர் (சிற்பம்)

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேஸ்வரசுவாமி தேவஸ்தானம்:



திரிபுரசம்ஹாரர் (சிற்பம்)

# சித்தாந்த விஞவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

[ மலர் 27 இதழ் 7 பக்கம் 290ன் தொடர்ச்சி ]

## ஐம்பொறிகள் பூதகாரியம் ஆகாமை

மாணுக்கன்; தருக்க நூலார் செவி முதலிய பொறிகள் ஓசை முதலியவற்றைக் கவர்தலால், அவை அவற்றைத் தம் குணங்களாக உடைய ஆகாயம் முதலிய பூதங்களின் காரியங்களே என்பரன்றே? அது பொருந்தாமை என்னை?

ஆசிரியர்: செவி முதலிய பொறிகளால் கவரப்படும் ஓசை முதலியவை ஆகாயம் முதலிய பூதங்களின் குணங்களாதல்பற்றி அப்பொறிகளைப் பூதங்களின் காரியம் எனின், பூதங்களின் காரியம் பூதங்களினும் தூலமாக வேண்டுமாதலின் செவி முதலிய பொறிகள் பொறிகட்குப் புலனாக வேண்டும். ஏனெனின். குடம், ஆடை முதலிய பொருள்கள் பூதங்களின் காரியமாதலின் அவை கண் முதலிய பொறிகட்குப் புலனாகின்றனவன்றே? செவி முதலிய பொறிகட்கு இடமாகிய புறத்துறுப்புக்கள் நமக்குப் புலனாகின்றனவன்றி அவற்றை இடமாகக் கொண்டு நிற்கும் ஆற்றல்களாகிய பொறிகள் நமக்குப் புலனாகவில்லை என்பது அனைவரும் அறிந்தது. ஆகவே, செவி முதலிய பொறிகளைப் பூதங்களின் காரியம் என்றல் பொருந்தாமை அறிக.

செவி முதலிய பொறிகளால் கவரப்படும் ஓசை முதலியனவும், அப்பொறிகட்கு இடமாய் நிற்கும் ஓசை முதலியனவும் வேறு வேறன்றி ஒன்றல்ல. பொறிகளால் கவரப்படுவன புலன் அல்லது விடயம் என்னும் தாத்துவிகங்கள். பொறிகட்கு இடமாவன பூதங்கட்கு முதற்காரணமாகிய தத்துவங்கள். எனவே, புலன்களாகிய தாத்துவிகங்களைக் கவர்தல் பற்றிப் பொறிகளைப் பூதங்களின் காரியமெனல் வேண்டாமை அறிக.

## பூதங்களின் குணமும் செயலும்

மாணாக்கன் : நன்கு அருளிச்செய்தீர்கள். பூதங்களைப் பற்றி அறிய வேண்டுவன இன்னும் உளவோ ?

ஆசிரியர் : உள ; அவற்றைக் கூறுகின்றோம். ஆகாயம் முதலிய பூதங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட குணமும், செயலும் உள,

ஆகாயத்தின், குணம் வெளியாதல் : செயல், எப்பொருட்கும் இடங்கொடுத்தல்.

வாயுவின் குணம், நில்லாது அசைதல். செயல், பரந்து கிடக்கும் பொருள்களை ஒருங்கு திரட்டல் (குவித்தல்).

தேயுவின் குணம், வெம்மை (உஷ்ணம்) செயல், சுட்டு ஒன்று படுத்தல் அல்லது பாகம் பண்ணுதல்.

அப்புவின் குணம், தண்மை (குளிர்ச்சி), செயல், பதம் செய்தல் (மென்மைப்படுத்தல்).

பிருதிவியின் குணம், திண்மை (கடினமாதல்), செயல், எப்பொருளையும் தாங்குதல்.

மாணாக்கன் : 'உலகாயதர் 'ஆகாயம்' என்று ஒருபொருள் இல்லை ; யாதொரு பொருளும் இல்லாதிருப்பதே ஆகாயம்' எனக் கூறுவரன்றோ ?

ஆசிரியர் : ஆம் ! 'யாதொரு பொருளும் இல்லாதிருப்பதே ஆகாயம், எனின், இல்லாமை இல்லாமையைத் தரும் அன்றி இருப்பைத் தாராது. நிலம் இல்லை என்றால், தாங்குதல் இராது போகுமேயன்றி மற்றொரு செயல் நிகழாது. அதுபோல யாதொரு பொருளும் இல்லாமையே ஆகாயம் எனின், ஆகாயத்தால் யாதொரு செயலும் நிகழாதிருத்தல் வேண்டும். ஆனல், எப்பொருளும் இருப்பதும், உலாவுவதும் ஆகாய வெளியிலே தான். ஆகவே அச்செயல் நிகழ்ச்சிக்கு இடமாய் இருக்கும் ஆகாயத்தை இல்லை என்றல் அறியாமையாம்.

நிலத்தின் மேற்கட்டப்படும் மாளிகைகளின் அகல நீளங்கட்கு நிலம் பற்றுக்கோடாவதுபோல அவற்றின் உயரத்திற்கு ஆகாயம் பற்றுக்கோடாதல் வெளிப்படை.

பொருள்கள் ஒன்றோடொன்று தாக்கும்பொழுது எழும் ஓசை வேறுபாட்டிற்குக் காரணம் ஆகாயத்தின் வெளி அவ்வப் பொருளினுள் வேறுபட்டிருத்தலே. ஆகாயமே இல்லை எனின் ஓசையே எழாது. ஆகவே, ஓசையைக் குணமாக உடையதாய் இடங்கொடுத்தலைச் செய்யும் ஆகாயம் உள்பொருளே யாதல் அறிக.

"நிலந்தீ நீர்வெளி வீசும்போடைந்தும் - கலந்த மயக்கம் உலக மாதலின்" "பூதங்கள் அஞ்சும் அகத்தேநகும்" என்றாற் போலத் தொல்காப்பியர், திருவள்ளுவர் முதலிய பெரியார் அனைவரும் பூதங்கள் ஐந்து எனக் கூறுதல் காண்க.

மாணுக்கன்: நல்ல விளக்கம் தந்தீர்கள். மேலும் உள்ள வற்றைக் கூறுதல் வேண்டும்.

## பூதங்களின் வடிவம், நிறம், குறி, எழுத்து அதிதேவர்.

ஆசிரியர்: தத்துவங்களின் இயல்பை உள்ளவாறு உணர்வது அவற்றிற் கட்டுற்று நில்லாது நீங்குதற் பொருட்டேயாம். அங்ஙனம் நீங்கும்வழிகளில் அவைகளை அதிதேவர்களின் வழி, வழிபட்டு நீங்கும் முறை உண்டு. அம்முறையில் யாவராலும் நன்கறியப்பட்ட பூதங்கட்கு வடிவம், நிறம், குறி, எழுத்து, அதிதேவர் என்பனவைகளை ஆகமங்கள் கூறும்.

பிருதிவிக்கு வடிவம் நாற்கோணம்; நிறம் பொன்மை; குறி (அடையாளம்) வச்சிராயுதம்; எழுத்து லகர மெய்; அதிதேவர் பிரமன்.

அப்புவிற்கு வடிவம் பிறை; நிறம் வெண்மை; குறி தாமரை மலர்; எழுத்து வகர மெய்; அதிதேவர் திருமால்.

தேயுவிற்கு வடிவம் முக்கோணம்; நிறம் செம்மை; குறி சுவத்தி; எழுத்து ரகர மெய்; அதிதேவர் உருத்திரன்.

வாயுவிற்கு வடிவம் அறுகோணம்; நிறம் கருமை; குறி ஆறு புள்ளி; எழுத்து யகர மெய்; அதிதேவர் மகேசுவரன்.

ஆகாயத்திற்கு வடிவம் வட்டம்; நிறம் புகைமை; குறி அமுதவிந்து (,); எழுத்து அகர உயிர். அதிதேவர் சதாசிவன்.

எழுத்துக்கள் வித்தெழுத்துக்களாம் (பீஜாக்கரங்களாம்). ஆகவே அவைகளை ஆ, ஈ, ஊ, ஐ, அ; என்னும் உயிரெழுத்துக்களோடு கூட்டி உச்சரிக்கப்படும். இம்மெய்யெழுத்துக்கள் அனைத்திற்கும் முதலில் ஹகாரமெய் சேர்க்கப்படும்.

## தத்துவத் தொகை.

'சித்தம், புத்தி, அகங்காரம், மனம்' என்னும் அந்தக் கரணங்கள் நான்கு, ஞானேந்திரியம் ஐந்து, பூதம் ஐந்து ஆக இருபத்து நான்கும் 'ஆன்ம தத்துவம்' எனப்படும். மூலப்பிரகிருதி இவை இருபத்து நான்கிற்கும்மேல் காரண நிலையில் இருப்பதாகையால், அதைத் தத்துவமாக எண்ணித் தொகை கொள்வதில்லை. எனினும், சித்தமாய் நிற்கும் குணதத்துவத்திற்கும், பிரகிருதிக்கும் வேற்றுமை சிறிதேயாகையால், சிலவிடத்துச் சித்தத்தை வேறுவைத்து எண்ணாது, பிரகிருதியை எண்ணி 'ஆன்ம தத்துவம் இருபத்து நான்கு' என்றலும் உண்டு.

## பெயர்க் காரணம்

மாணுக்கன்: ஆன்மதத்துவம், வித்தியா தத்துவம், சிவ தத்துவம் என்னும் பெயர்கட்குக் காரணங்கள் யாவை?

ஆசிரியர்: 'ஆன்ம தத்துவம்' என்பதில், 'ஆன்மா' என்பது முன்னர்ச் சகல வர்க்கத்தினராகிய ஆன்மாக்களைக் குறித்துப் பின்னர் அவ்வான்மாக்கட்குத் தலைவராகிய சீகண்ட வுருத்திரரைக் குறிக்கும். மூலப்பிரகிருதியிலிருந்து குணதத்துவம் முதலியவைகளைத் தோற்றி ஒடுக்குபவர் சீகண்ட வுருத்திரராதல் பற்றி இவ்விருபத்துநான்கு தத்துவங்களும் 'ஆன்ம தத்துவம்' எனப் பெயர்பெற்றன.

அசுத்தமாயையிலிருந்து மாயை காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் என்னும் தத்துவங்களை 'அனந்தர்' என்னும் வித்தியேசுரர் தோற்றி ஒடுக்குவதால், அவை ஏழும் 'வித்தியா தத்துவம்' எனப் பெயர்பெற்றன.

'சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம் சுத்த வித்தை' என்னும் ஐந்தையும் சுத்தமாயையிலிருந்து சிவபெருமானே தோற்றி ஒடுக்குவதால், இவை, 'சிவதத்துவம்' எனப் பெயர்பெற்றன. மேலும் சிவபெருமான் அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூவகைத் திருமேனிகளுடன் எழுந்தருளியிருந்து ஐந்தொழில்

செய்வதற்கு இடமாவன சிவம் முதலிய இவ்வைந்து தத்துவங் களே யாதல் பற்றியும், இவை 'சிவதத்துவம்' எனப்பட்டன.

விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் மூவகை ஆன்மாக்களில் விஞ்ஞானகலர்க்கு மட்டுமே சிவதத்துவங்களின் காரியமாகிய தனு, கரண, புவன போகங்கள் வந்து பொருந் தும், ஏனைய இருதிறத்து ஆன்மாக்களுக்குச் சிவதத்துவம் அவ்வாறு வந்து பொருந்துவதில்லை.

ஆன்ம தத்துவம் இருபத்து நான்கு, வித்தியா தத்துவம் ஏழு, சிவதத்துவம் ஐந்து என்னும் முப்பத்தாறு தத்துவங்களில் மேலே உள்ள சிவதத்துவம் ஐந்தும் சுத்தம். கீழே உள்ள ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் அசுத்தம், இடையே உள்ள வித்தியா தத்துவம் ஏழும் மிச்சிரம்.

சிவதத்துவம் ஐந்தும் ஏனைய தத்துவங்களைச் செலுத்தலால் அவை, 'பிரேரக காண்டம்' எனப்படும். வித்தியா தத்துவங்கள் ஏழும் ஆன்மாவிற்குப் போத்திருத்துவத்தை உண்டாக்குவதால் அவை, 'போசயித்திரு காண்டம்' எனப்படும். ஆன்ம தத்துவம் இருபத்து நான்கும் ஆன்மாவிற்குப் போகத்தைத் தருதலால் அவை, 'போக்கிய காண்டம்' எனப்படும்.

## மூவகைச் சரீரம்

தத்துவங்கள் முப்பத்தாறும் ஆன்மாக்கட்கு 'தூல சரீரம், சூக்கும சரீரம், பர சரீரம்' என்னும் மூவகை உடம்புகளாய்ப் பொருந்தி நிற்கும்.

பூதங்கள் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து ஆகப் பதினைந்து தத்துவங்கள் தூல சரீரம் தன் மாத்திரை ஐந்து, அந்தக் கரணம் நான்கனுள் சித்தம் ஒழிந்து மூன்று ஆக எட்டுத் தத்துவங்களும் சூக்கும சரீரம் எட்டுத் தத்துவங்களால் ஆவதுபற்றிச் சூக்கும சரீரம். புரியட்டக சரீரம்' என்றும் சொல்லப்படும்

அந்தக் கரணங்களுள் சித்தமாய் நிற்கும் குணதத்துவம் ஒன்று. வித்தியா தத்துவங்கள் ஏழு ஆக எட்டுத் தத்துவங்களும் பர சரீரம். மூலப்பிரகிருதி குணதத்துவத்தின் வேறுகாமை யறிக.

பர சரீரத்துள் குண தத்துவம் முக்குணமயமாய் நிற்றலின், 'குண சரீரம்' என்றும், காலம் முதலிய ஐந்தும் உயிர்க்குச் சட்டை போல அமைதலின் 'கஞ்சுக சரீரம்' என்றும். மாயா தத்துவமே ஏனைய தத்துவங்கட்குக் காரணமாதலின் அது, 'காரண சரீரம்' என்றும் சொல்லப்படும். சிவ தத்துவம் பிரளயாகலர் சகலர் கட்கு உடம்பாயவாராமை அறிக.

பர சரீரத்தை இங்ஙனம் மூன்றாக்கி, இவற்றுடன் சூக்கும தூல சரீரங்களையும் கூட்டி, 'தூல சரீரம், சூக்கும சரீரம், குண சரீரம், கஞ்சுக சரீரம், காரண சரீரம்' எனச் சரீரத்தை ஐந்தாகக் கூறுதலும் உண்டு.

## ஐங்கோசங்கள்

தூல சரீரம் முதலிய சரீரங்கள் ஐந்தையும் ஐங்கோசங்களாகக் கூறுதலும் உண்டு. அவையாவன:- தூல சரீரம் உணவால் நிலைபெறுதலின் அஃது, 'அன்னமய கோசம்' எனப்படும். சூக்கும சரீரம் பிராணவாயுவின் இயக்கத்தால் செயற்படுதலின் அது, 'பிராணமய கோசம்' எனப்படும். குண சரீரம் சித்தமாய் நிற்றலின், அது 'மனோமய கோசம்' எனப்படும். கஞ்சுக சரீரம் ஆன்மாவை அறிவுடையதாகச் செய்வதால், அது, 'விஞ்ஞானமய கோசம்' எனப்படும். காரண சரீரம் சிறிதே அறிவைத் தந்து களிப்பை உண்டாக்குவதால், அஃது 'ஆனந்தமய கோசம்' எனப்படும். இங்ஙனம் ஐங்கோசங்களையும் கண்டுகொள்க.

(தொடரும்.)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswamy Devasthanam, Sirkazhi.

"I We are very fortunate to have the evening dharsan of all the deities of this famous shrine. The temple is very neatly maintained. The concerned authorities and the Gurukkals are very courteous and informative. Once again we congratulate the authorities of this shrine for the wonderful maintenance and upkeep "

(Sd.) A. M. Sambandam.
21—6—68

# கலைவளர் மாளிகை

திரு. அ. கலியபெருமாள் M. A.

( மலர் 27, இதழ் 7, பக்கம் 303 இன் தொடர்ச்சி )

" ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசை யாக
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்
தோடமை முழவின் துதை குரலாகக்
கணக்கலை இருக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டுயாழாக
இன்பமல் இமிழிசை கேட்டுக் கலி சிறந்து
மந்திநல் லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து இயலி ஆடுமயில்
நனவுப் புகு விறலியின் தோன்றும் " (அகம் 82)

தமிழர்தம் இசை நுணுக்கத்திற்கும் ஈடுபாட்டிற்கும் ஒரு சான்று. வையையின்துறை நோக்கி நீராடி மகிழ விரைகிறது மக்கள் திரள். வையை நதித்துறையில் நீராடி முடித்தோர் எதிரில் திரும்பிச் செல்கின்றனர். அவர்களுள் முதியோர், காளையர், மடந்தையர், சிறுவர் என வலியாரும், மெலியாரும், இடைப்பட்டாரும் இருக்கின்றனர். இவ்வாறு வேறுபட்ட நிலையினராக இருப்பினும் நெருக்கத்தால் எல்லோரும் மென்னடையராகச் செல்கின்றனர். விரைவாகச் செல்லுதலும் சிலர் மெதுவாகச் செல்லுதலும் அங்கே இல்லை. இதை விளக்கப் புலவருக்கு உவமை இசைத்துறையில்தான் கிடைக்கிறது. வாத்தியங்கள் பலவும் ஒரே தன்மையன அல்ல. ஒன்றற்கொன்று கூறு வேறுபாடுடையன. சில விரைந்த நடையின; சில மந்த நடையின. ஆனால் விளம்பித நடையில் அவையாவும் வேறுபாடின்றி மென்னடையவாய்ச் செல்லும். அதுவொன்றே வன்மை, மென்மை, இடையெனும் பண்பால் வேறுபட்டோர் நெருக்கம் காரணமாக மென்னடையராகச் செல்கின்றனர்.

" அதிர்குரல் வித்தகர் ஆக்கிய நாள்
விதிகூட்டிய இயமென்னடை போல "
(பரிபாடல் 10)

சங்ககாலத்தில் பாணரும், கூத்தரும், விறலியரும் ஆடலையும் பாடலையும் வளர்த்தனர். கருவி இசையோடு பொருந்திய கண்ட இசையே சிறந்ததெனக் கருதப்பட்டது. கலத்தோடு புணர்ந்தமைந்த கண்டத்தராக இருந்தனர் விறலியர். கருவி இசையிலும் கண்ட இசையிலும் தமிழர் வல்லமை பெற்றுத் திகழ்ந்தனர். கருவி இசை வழங்கும் கருவிகளுள் யாழும், குழலும் குறிப்பிடத்தக்கவை.

துளைக்கருவியாம் குழல், கூத்துக்கு இன்றியமையாத இசைக் கருவியாக இருந்தது. குழலிசைக்கேற்ப மகளிர் ஆடுவதை இலக்கியம் குறிப்பிடுகிறது. தாள அறுதியை உடைய குழலோசையின் தாளத்திற்கொப்ப மகளிர் ஆடினர் என்பதை "அறல்குழல்பாணி தூங்கியவரோடு" (162) என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.

கலத்தாலும் கண்டத்தாலும் எழுப்பும் பண்களைக் குழலிலும் எழுப்பிக்காட்டினர். கரியதுளையை உடைய குழல் எழுப்பிடும் இனிய பாலைப்பண்ணைக் "கருந்துளைக் குழலின், இன் தீம் பாலை" என்று பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. குழலில் பாட்டைச் சுருதி குன்றாமல் இசைக்க முடியும் என்பது "விளிப்பது கூறும் தீங்குழல் துதைஇ" என்னும் மலைபடுகடாம் அடிகளால் விளங்கும். குழலின் இசை நம்மை உருக்கும் இனிமை உடையது. பேகனால் கைவிடப்பெற்ற பெருமனைக்கிழத்தியாம கண்ணகி பிரிவாற்றாது வருந்தும் வேளையில் புலவர் பேகனைப் பாடப் பாவைநல்லாள் மார்பகம் நனைய அழுததைக் கபிலர் ''குழலினைவதுபோல் அழுதனள் பெரிதே'' என்று கூறுகிறார் சுருதியை உணர்த்தும் குழலும் தாளமும் இயம்ப மிடற்றுப்பாடல் இசை எழுப்புவதைப் பரிபாடல்

' பகர்குழல் பாண்டில் இயம்ப அகவுநர்
நாநவில் பாடல் " (பரி. 11)

என்று குறிப்பிடுகிறது.

குழலில் ஏழுதுளை உடையனவும் ஐந்துதுளை உடையனவும் உண்டு. ''ஏழ்புழை ஐம்புழை யாழிசை கேழ்த்தன்ன'' என்னும் பரிபாடல் (8) அடியால் இது விளங்கும். குழலைப் பற்றிய செய்திகள் சிலம்பு அரங்கேற்று காதையில் அடியார்க்கு நல்லார் உரை விளக்கத்தில் விரிவாகக் காணப்படுகின்றன. மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி ஆகிய ஐந்தாலும் குழல் செய்யப்படலாம். மூங்கிலில் செய்வது உத்தமம் வெண்கலத்தில் வடிப்பது மத்திமம். இவையொழிந்த ஏனையவற்றுள் இயற்றுவது அதமமாம்.

குழல் இசைப்பதுபற்றியும் அடியார்க்கு நல்லார் குறிப்பிடு கிறார். குழலின் ஏழு துளையையும், இடக்கையில் பெருவிரலும் சிறுவிரலும் நீக்கி மற்றை மூன்று விரலும் வலக்கையில் பெரு விரலொழிந்த நான்கு விரலும் ஆக ஏழு விரலும் பண் பற்றி இசைத்தல் வேண்டும். ஏழு துளைகளாலும் சட்சமம், இடபம், காந்தாரம், மத்திமம். பஞ்சமம் தைவதம், நிடாதம் என ஏழிசையும் பிறக்கும். இவ்வேழிசையையும் தமிழர் குரல், துத்தம் கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என வழங்கினர் என்பதை முன்பே கண்டோம்.

நூல்கள் கூறியமுறைமையில்சித்திரப்புணர்ப்பு, வஞ்சனைப் புணர்ப்பு எனக் கூறப்படும் இரண்டு கூற்றினையும் தெரிந்து, பாடலாசிரியனைப்போன்ற அறிவுடையவனாகக் குழல் வல்லவன் இருத்தல் வேண்டும். இசைகொள்ளும் எழுத்துக்களின்மேல் பண்ணீர்மை நிறுத்தல் சித்திரப்புணர்ப்பு என்பர். இசை கொள்ளும் எழுத்தின்மேல் வல்லொற்று வந்தவிடத்து அவற்றை மெல்லொற்றுப்போல் நெகிழச்செய்து புணர்த்தல் வஞ்சனைப் புணர்ப்பாம். இவைபோன்ற நுணுக்கமான செய்திகளைச் சிலம்பில் அரங்கேற்றுகாதை குழலான் அமைதி கூறும் பகுதி யில் கண்டுகொள்க.

செந்தீயால் துளையிட்டுக் குழல் செய்யப்படுவதைப் பெரும் பாணாற்றுப்படையில்,

'' அந்நுண் அவிர்புகை கமழக் கைம்முயன்று
நெடுகோல் கொண்ட பெருவிறல் நெகிழிச்
செந்தீத் தோட்ட கருந்துளைக் குழல் '' (177-79)

என்னும் அடிகள் விளக்கும்.

இசைக் கருவிகளுள் முக்கிய இடம்பெற்றது நரம்புக் கருவியான யாழ். ஏனைய கருவிகளைவிட யாழைப்பற்றியே இலக்கியத்துள் அதிகமாகக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. எல்லாப் பண்களையும் யாழில் இசைத்துக்காட்ட வல்லாரைப் பாணர் எனக் குறிப்பிட்டனர். யாழ், தனித்தும் மிடற்றுப்பாடலோடு கூட்டியும் இசைக்கப்பட்டது. யாழிசையோடு கூடிய கண்டப் பாடல் யாவராலும் விரும்பப்பெற்றது. யாழிசையால் பெறும் இன்பத்தைப்பற்றிப் புலவர் அருமையாக எடுத்துரைக்கின்றனர்.

தலைவனும் தலைவியும் வரைந்துகொண்டு தகவுறு இல்லறம் நடாத்துகின்றனர். மங்கலமாம் அவர்தம் மணமாட்சிக்கு நன்கலமாகப் புதல்வன் ஒருவன் தோன்றுகின்றான். தலைவனும் தலைவியும் நடாத்தும் இல்லறத்தைக் காணவருகின்றாள் செவிலித்தாய். வந்தவள் கண்டகாட்சி, அன்பாலே இணைபிரியாது கட்டுண்டு கிடக்கும் அந்தக் குடும்பத்தின் மாண்பை எடுத்துரைக்கிறது. அரும்பெற்ற புதல்வனை அணைத்தவாறு படுத்திருக்கிறாள் அன்னை. அவள் முதுகினைத் தழுவியவாறு விடுதலாறியா விருப்பினனாக உள்ளான் அன்பன். இவ்வாறு மூவரும் நீங்கா அன்பு பூண்டு இருத்தல் கண்ணுக்கும் காதுக்கும் எத்துணை இனிமை தருகிறது; பண்பும் அன்றோ உடையதாக இருக்கிறது! செவிலிகண்ட காட்சியின் இனிமையை உவமைகொண்டு விளக்குகிறார் செந்நாப்புலவர். பாணர் இசைக்கும் யாழோசை காதிலே பாய்கிறது. ஆ, அத்துள்ளல் ஓசைபோலச் செவிலி கண்ட காட்சி இனிது.

"புதல்வற் கவைஇய தாய்புறம் முயங்கி
நசையினள் வதிந்த இடக்கை பாணர்
நரம்பினர் முரற்கை போல
இனிதாலம்ம பண்புளார் உடைத்தே"

(ஐங்குறுநூறு 402)

(தொடரும்)

# " கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

**வித்துவான். திருமதி. ப. நீலா**

( மலர் 27, இதழ் 7, பக்கம் 293 இன் தொடர்ச்சி )

## 4. தடாதகை திருவவதாரம் (1)

மலயம் என்கிற பொதிய மலையைத் தன் கொடியின் இலச்சினையாகக் கொண்ட மலயத்துவசன் மதுரையம்பதியில் வெற்றி என்ற பூணைப் பூண்டவனாக, காட்சிக் கெளியனாக, கருணை கொண்டவனாக, தமிழ்மொழி - வடமொழி என்ற இருகடல்களின் எல்லை கண்டவனாக அரசுவீற்றிருந்தாள்கிறான். மன்மதனையொத்த அழகனான அவன் சோழ மன்னன் சூரசேனனின் மகள் காஞ்சனமாலையைக் கைப்பிடித்தான். ஆண்டு பலவாகியும் மகப்பேறு கிட்டாதிருக்கவே பாண்டியன் பரிவேள்வி செய்யத் துணிந்தான். துணிந்தபடியே சிறந்தார் பலரின் துணையோடு மறைவிதி வழுவாமல் தொண்ணூற்றொன்பது வேள்விகளையும் வேட்டு முடித்தான்.

### மகவேள்வி செய்ய மகபதி தூண்டல் :

தொண்ணூற்றென்பது அஸ்வமேத யாகம் செய்துமுடித்துவிட்ட பாண்டியன் இன்னொன்றையும் செய்துவிடுவானானால் தனது இந்திர பதவிக்கு இடையூறு வரும் என்று எண்ணிய இந்திரன் பாண்டியனிடம் வந்து வேள்வி வேட்பதன் நோக்கம் என்ன? என்று வினவினான். 'நன்மைபுரி மகவின்றி நாளும் நான் நலிகின்றேன்' என்று மலயத்துவசன் கூற, அதற்குரிய வேள்வி இதுவல்ல. நல்ல புத்திரப்பேறு வாய்க்க புத்திர காமேஷ்டி யாகமன்றோ நீ ஆற்றவேண்டும்; என்று அறிவுறுத்தி விண்புலமடைந்தான் விசும்புளார் கோமான்.

**வேம்பலர் தாரான் வேள்வி வேட்டான் :**

இந்திரனின் சொற்படி தென்னவன் மகவேள்வியில் விருப்புடையனாகித் தன் தேவியோடுகூட விரத முறை வழுவாது வேள்விச்சாலை புகுந்து வேள்வி செய்யத் தொடங்கினான். கீழ்த் திசையாகிய இந்திரனுக்குரிய திசையில் உள்ள ஆசனத்தில் அமர்ந்து மறையாசிரியர்கள் காட்டும் மந்திரச் சடங்கினைச் செய்து எரியில் நெய் - பொரி - சமித்து ஆகியவைகளைப்போட்டு இன்னமுதமயமான ஆகுதியை வானோர் உவப்பக் கொடுத்தான்.

**தீயிடைத் தோன்றிய தடாதகை நல்லாள் :**

வேள்விக் குண்டத்திலிருந்தெழுந்த பசும்புகை விசும்பையும் நிலத்தையும் திசைகளையும் போர்க்கும் போர்வை போலப் பரந்தது. மீனவனின் வலத்தோளும் காஞ்சனையின் இடத் தோளும் நன்னிமித்தமாகத் துடித்தன. தாய்மை என்ற புனித வுணர்வு அங்கமெங்கும் பொங்கிக் காஞ்சனையிடத்து அமுத மாய்ப் பெருக, சைவம் முதலிய தவத்துறை நிவப்ப, தர்மம் தழைக்க, தமிழ்நாடு தலைநிமிர, ஈக்கடவுள் செய்த புண்ணியப் பயனால் உமாதேவியார் கொழுந்துபடு குண்டத்திலிருந்து அப் பொழுதலர்ந்த மலர்க்கொடியென ஒளியுமிழும் வடிவத்தொடு தோன்றினாள்.

நிலவிடத்துக் காணும் கறைபோல உச்சிக் கொண்டை திகழ நிலவொளி சரிவதுபோல் அதனினின்றும் முத்துச்சரம் தொங்கிற்று. சூழியமணிந்த சுடர்மேனியாளின் காதுகளில் குதம்பை என்ற அணி சுற்றியிருந்த இருள்கடிந்து சிறுதோள் வருடி ஆடின. பொற்றிருமணிச் சிறிய மேகலை சிற்றிடையில் புலம்ப நூபுரச் சதங்கை குறுந்தளிர் மெல்லடிக் கிடந்து குழறி ஏங்க பொன்னங்கொடியெனப் பிராயமொரு மூன்றுடன் நின்றாள்.

> தெள்ளமுத மென்மழலை சிந்துவிள மூரல்
> முள்ளெயி றரும்பமுலை மூன்றுடைய தோர்பெண்
> பிள்ளையென மூவொரு பிராயமொடு நின்றாள்
> எள்ளரிய பல்லுயிரு மெவ்வுலகு மீன்றாள்.

**சிலம்பொலிக்கும் சீறடிகளை மெல்லப் பெயர்த்துவந்து காஞ்சனமாலையின் மனங்குளிர மடிமீது அமர்ந்துகொண்டாள்.**

செய்யவாய் வெளிருது சேல் போல் நீண்ட மையவாய் மதர்த்த கருங்கண் பசவாது ஐயிரண்டு மதியஞ் சுமந்து ஆவிலே வருந்த அவத்தையுருது பெற்ற மகவை ஆர அணைத்து உச்சிமுகர்ந்தாள். முன்னே உமையை மகளாகப் பெற்ற மலையரசன் மனைவி மேனையைப் போலவே இவளும் களிகூர்ந்து துய்யவாய் முத்தங் கொண்டு துயர்நீங்கினுள்,

உலகமெல்லாம் படைத்துக் காத்து அழிக்கவல்ல உமா தேவியைத் தன் மகளாகப் பெற மலயத்துவச பாண்டியன் என்ன தவம் செய்தானே! எத்தனை தவம் செய்தானே!

பரை என்ற பராசக்தி, ஆதி எனும் ஆதி சக்தி, விருப்பு எனப்படும் இச்சாசக்தி, அறிவு எனப்பெயருறும் ஞான சக்தி, தொழிலாகி விளங்கும் கிரியா சக்தி என்னும் இத்துணைச் சக்திகளும் தானேயாகி ஐந்தொழில் புரியும் அம்மை இங்கே தன் அம்மை அப்பனுகத் தென்னவனையும் அவன் தேவியையுங் கொண்டான்.

பரையாதி விருப்பறிவு தொழிலாகி
    உலகமெலாம் படைத்துக் காத்து
வரையாது துடைத்து மறைத் தருளியவை
    நின்றுந் தன்வடிவு வேருய்
உரையாதி மறைகடந்த வொருமுதல்வி
    திருமகளா யுதித்தற் கிந்தத்
தரையாளு மன்னவன்செய் தவமிதுவோ
    அதற்குரிய தவந்தான் மன்னே.

என்று பரஞ்சோதியார் மதுரையரசனின் மாதவத்தைப் போற்றிப் பாடினுர்.

### வருத்தம் நீக்கிய வானெலி :

நெறியல்லா நெறிச்செல்லும் பொறியுணர்வையும் அந்தக் கரணங்களின் உணர்வையும் கடந்த ஞானமயமான வடிவழகி நமது மகளாகத் தோன்றினுளே என்று மலயத்துவசன் மகிழ்வதற்குப் பதிலாக மனக்கலக்கம் கொண்டான். பக்தியுடன் யாகம் செய்த எனக்கு அவ்வியாகம் ஓர் ஆண் மகவைத் தரவில்லே. வேள்வியில் வந்துதித்த இப்பெண் மகவோ மாற்ருரும்

நகைக்கும் வண்ணம் மூன்று தனங்களோடல்லவா தோன்றி யுள்ளது என்று வருத்தமும் வாட்டமும் கொள்ள, அந்நேரம் வானிடையே ஓர் ஒலி கேட்டது. 'மன்னவ நினது மகளை மைந்தனென்றெண்ணியே மறைச் சடங்கனைத்தும் செய்து வளர்ப்பாயாக. தடாதகை எனப் பெயர் சூட்டி முடியும் சூட்டு. அவளுக்குரிய நாயகன் வரும்போது நகில் ஒன்று மறையும்' என்ற குரல் கேட்டு சித்தங் களித்தான். நாட்டிலுள்ள சிறைக் கோட்டங்களை எல்லாம் திறக்கச் செய்தான். குடிகளிடமிருந்து இனி ஏழாண்டுக் காலம் வரிவாங்கவேண்டாம் என்றான். நிதியறையைத் திறந்திட்டான். நேர்மைமிகு புலவர்களைப் பரிசில் கொடுத்து மகிழ்வித்தான். ஏழைகளுக்கு அன்னமும் ஏவலர்களுக்குச் சொன்னமும் வாரிக்கொடுத்தான். மதுரைநகர் வண்ணத்தாலும் விழாவாலும் வானுலகம்போல் விளங்கிற்று.

## அன்னமென விளையாடும் தென்னன் குலச்செல்வி :

திருந்தாத இளங்குதலை ஆயத்தோடு தெருவில் வந்து சிற்றில் இழைத்துச் சிறுசோறுக்கி பாவைக்குப் பாலூட்டி பந்து பயின்று பொழுது போக்குவாள். தோழியர்க்கு ஆடிக் காட்டுவாள் போல அம்மனை - கழங்கு ஆடுவாள். நித்திலக் கயிற்றூடு அலையும் ஊசலில் ஆடி உல்லாசங் கொள்வாள். கலைகளை மேகலையாக அணிந்த விமலை, அறம் முதலிய எண்ணென்கு கலைகளையும் ஆசறப் பயின்றாள்.

யானை குதிரை யேற்றங்களைப் பழகினாள். வில் வாள், வச்சிரம் முதல் பல் படைக்கலங்களையும் ஆளப்பயின்றாள். பாண்டியன் - தன் பசுங்கொடியின் பயிற்சியையும், புலமையையும், பண்பையும் பார்த்துப் பார்த்துப் பூரித்தான் நல்லதோர் நாளில் தனது தவக்கொடிக்கு முடிசூட்டிக் களிக்க விரும்பினான்.

## முடிபுனையப்பெற்று அரசியானாள் மோகனப் புன்னகையாள் :

மலயத்துவசன் மகுடாபிஷேகங் குறித்துத் திசையனைத்தும் ஓலை செலவிட்டான். காவல் சூழ்ந்த கொடியணிமாநகரம் விழாக்கோலம் பூண்டது. நல்லமைச்சனாகிய சுமதி முடிபுனைய ஏற்ற நன்னாளைக் குறித்துச் சொன்னான். மீனவன் யானையெருத்தஞ் சுமந்து வந்த கங்கை முதலிய ஒன்பது தீர்த்தங்

களால் அம்பிகையை நீராட்டி, மந்திரத் தீ வளர்த்து, சிங்கஞ் சுமக்கும் ஆசனத்தையும் நேயமொடு பூசித்தான். மணிமுடியை மதயானை மீதேற்றி நகர்வலம் வரச்செய்தபின் அங்கயற்கண்ணி சிங்காதனத்தில் அமர, மங்கலவாத்தியம் முழக்கமிட, மாணிக்க மகுடத்தைத் தேவியின் திருமுடியில் சூட்டினான். அருந்தவர் ஆசி கூறினர். முனிபத்தினியர் பல்லாண்டு பாடினர். வானவர் மலர் சொரிய - மறை ஒலிக்க - மக்கள் கண்டு மகிழ்ந்தனர், வேம்புதரித்து அரசாளும் உரிமையைத் தடாதகைப்பிராட்டிக்கு அளித்து நெஞ்சுவந்தான் வேந்தன். மண்ணுட்டை மகளுக் காக்கிய சில பகல் கழித்து விண்ணாடு ஆளப் புகுந்தான் பாண்டியன் மலயத்துவசன். மைந்தனைப் போலவே நின்று பிராட்டியார் தந்தைக்குச் செய்யவேண்டிய கடன்களை விரத நெறி வழுவாமல் செய்தார். அதன்பின்பு மக்கள் போற்றும் மாதரசியாக மனுநெறி வழாமல் செங்கோல் செலுத்திச் சிறந்தாள்.

(வளரும்)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### **Dharmapuram Adhinam**

**Sri Amirthakateswaraswamy Devasthanam, Tirucadayur.**

This temple is maintained in a very good manner and is an ideal place for the worship of Lord Siva and Devi. Archakars and tha Manager are highly efficient and helpful. We should be extremely grateful for Dharmapuram Devasthanam for the excellent arrangements made in this very important temple and for its supervisors, which moves the devotees coming from short and long distances fully satisfied in all respects. We are very fortunate for having been able to come this day to this temple and pay our homages to Lord Amirthagateswarar and Devi Abhirami Ambal. Let all those who worship them get their fuly and choicest blessings.

(Sd.) C. Ram.

8—6—68. Secretary to Government Pondichery.

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான்,

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 27, இதழ் 5, பக்கம் 220 இன் தொடர்ச்சி)

26. பாரமேச்வரம் :- உறுப்பு - முத்துமாலை. எண் பன்னிரண்டு லக்ஷம். கேட்டோர் - ஸ்ரீதேவி, உசநஸ். உபாகமங்கள் - மாதங்கம், யக்ஷிணீபத்மம், பாரமேச்வரம், புஷ்கரம், ஸுப்ரயோகம், ஹம்ஸம், ஸாமான்யம் என ஏழு.

27. கிரணம்;- உறுப்பு - ஆபரணங்கள். எண் - ஐந்து கோடி. கேட்டோர் - தேவதார்க்ஷ்யர், ஸம்பர்த்தர். உபாகமங்கள் - காருடம், நைர்ருதம், நீலம், ரூக்ஷம், பானுகம், தேனுகம், காலாக்யம். ப்ரபுத்தம், புத்தம் என ஒன்பது.

28. வாதுளம்;- உறுப்பு, திருப்பரிவட்டம், எண் - லக்ஷம். கேட்டோர் - சிவர், மகாகாலர். உபாகமங்கள் - வாதுளம் வாதுளோத்தரம், காலஞானம். ப்ரரோஹிதம், சர்வம், தர்மாத்மக. நித்யம்ச்ரேஷ்டம், சுத்தம், மஹாதநம், விச்வம், விச்வாத்மகம் எனப்பன்னிரண்டு.

आगतं शिववक्त्रेभ्यः गतं च गिरिजामुखे ।
मतं च शिवभक्तानामागमं चेति कथ्यते ॥

ஆகதம் சிவ வக்த்ரேப்யோ கதம்ச கிரிஜாமுகே I
மதம்ச சிவபக்த்தானும் ஆகமஞ்சேதிகத்யதே II


பரமகருணாநிதியான சிவனுடைய திருமுகத்தினின்றும் தோன்றி ஸ்ரீ பராசக்தியின் செவியிற் சென்று உலகத்திற்குப் பரப்பப்பட்டது. இது சைவமதம். அதனுல் இதற்கு ஆகமம், எனப் பெயர் வந்தது என்பது முதியோர்கள் வாக்கு. மற்றும். (ஆ) என்பது பாசம், (க) என்பது பசு, (ம) என்பது பதி எனவும் பொருள்படுதலால் ஆகமம் என்பதற்கு திருபதார்த்

தருமையாதீன முதற்குரவர்
ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்
குருபூஜை விழாவில்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
பட்டணப்பிரவேசத்திற்கு எழுந்தருளல்
(18—5—68)

திருப்பனந்தாள் மகாகும்பாபிஷேக விழாவில்



கடம் எழுந்தருளியாகி வலமாக வருதல்

திருப்பனந்தாள் மகாகும்பாபிஷேக விழாவில்



யாகசாலையிலிருந்து கடம் எழுந்தருளியாதல்

திருப்பனந்தாள் மகாகும்பாபிஷேக விழாவில்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களும்

அன்பர்களும்

தத்தை உணர்த்தும் நூல் என்பது பொருள். (ஆ)கமம் - ஆன்மாக்கள் மோக்ஷமடைய மலநாசம் செய்விப்பது எனப் பொருள்.

இத்தகைய சிவாகமம், ச்ரௌதம் அச்ரௌதம் என இரு பிரிவை உடையது. அதாவது,

शैवागमोऽपि द्विविधः श्रौताऽश्रौत विभेदतः।
श्रुतिसारमयः श्रौतः स्वतन्त्र इतरोमतः॥
स्वतन्त्रो दशधापूर्वं तथाऽष्टादशधापुनः।
कामिकादि समाख्याभिः सिद्ध सिद्धान्त संज्ञितः॥
श्रुतिसार मयोऽन्यस्तु शतकोटि प्रविस्तरः।

— शंकर संहिता

சிவாகமமானது ச்ரௌதம் என்றும் அச்ரௌதம் என்றும் இருபிரிவையுடையது. சுருதிசாரமாகவுள்ள சிவாகமம் ச்ரௌதம் என்றும் இதற்கு வேருகவுள்ளது அச்ரௌதம் எனவும் பெயர்பெறும்.

சுருதிசாரமாகவுள்ள சிவாகமம் ஸ்வதந்திரம் எனவும் இதரம் எனவும் இரண்டு, ஸ்வதந்திரமாகவுள்ளது. 28 ஆகமம், இதில் சிவபேதம் 10. உருத்திரபேதம் 18. காமிகம் முதலிய பெயரால் விளங்குவது சித்தாந்தம் எனக் கூறப்படுவது. இதரம் எனக் கூறப்படும் வேதசாரமான சிவாகமம் நூறுகோடி விஸ்தாரமுடையது (உபாகமங்களாகும்)

वेदसारमिदं तंत्रं तद्वत्वैदिक माचरेत्।
वेदान्तार्थमयं ज्ञानं सिद्धान्तं परमं शुभम्॥
इदं श्रौतोत्भवं श्रेष्ठं अष्टाविंशति तन्त्रकम्।
वेदसारमिदं ज्ञान मन्यरवन्यार्थ साथकम्॥

— मकुटं

காமிகம் முதலிய இருபத்தெட்டு ஆகமங்களும் வேதசாரமாக வுள்ளன. அதில் கூறப்பட்ட முறைப்படி வைதிகாநுஷ்டாத் தைச் செய்ய வேண்டும். இது வைதிகாசாரமுடையவர்களுக்கு

உரியது. மற்றது வைதிகாசாரத்திற்குத் தகுதியில்லாதவர் களுக்கு உரியது. அல்லது வைதிகாசாரமில்லாதவர்களுக் குரியது. மற்றும்,

सिद्धान्तो वेदसारत्वात् अन्यद्वेद बहिष्कृतम् ।
सिद्धान्त विहिताचारः वैदिकाचार उच्यते ॥

"வேதமோடாகம மெய்யா மிறைவனூ
லோதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுன்னுக
நாதனுரையிவை நாடிலிரண்டந்தம்
பேதமதென்னில் பெரியோர்க் கபேதமே"

—திருமந்திரம்.

வேதமும், ஆகமமும் இறைவனுல் செய்யப்பட்ட உண்மைநூல். பொது சிறப்பு எனப் பெயர் பெறும். ஒன்று வேதாந்தம், ஒன்று சித்தாந்தம். இவை இரண்டும் வேறுபோல் தோன்றினும் ஆராய்ந்து பார்க்கும் பெரியோர்களுக்கு அபேதமாகவே விளங்கும்.

அச்ரௌதம் எனப்படும் ஆகமங்கள் காபாலம், பாசுபதம், காளாமுகம் முதலியனவாகும்.

சிவாகமத்தில் கூறப்படாதது ஒன்றுமில்லை.

यदुक्तमन्यशास्त्रेषु विद्यते तच्छिवागमे ।
नदृष्टं यच्छिवज्ञाने तदन्यत्र नविद्यते ॥

என அன்னிய சாஸ்திரங்களில் சொல்லப்பட்டது. அது சிவாக மத்தில் இருப்பது, சிவஞானத்தில் (சிவாகமத்தில்) காணப்படா தது யாது அது அந்நிய சாஸ்திரத்தில் இருப்பதில்லை. அதாவது

अन्तरण्डस्थितानीह भुवनानितु कानिचित् ।
पौराणिकानि चान्यानि विज्ञेयानि शिवागमे ॥
सांख्ययोग प्रसिद्धानि तत्वान्यपि च कानिचित ।
शिवशास्त्र प्रसिद्धानि ततोन्यान्यपि कृत्स्नशः ॥

அண்டத்துள்ளிருப்பனவாகிய புவனங்கள் சில பௌராணி கங்கள். (புராணங்களில் சொல்லப்பட்டன) அவையல்லாதன

சிவாகமத்தில் அறியப்படுகின்றன. அதாவது புராணங்களில் கூறப்படும் புவனங்கள் பதினான்கு, சிவாகமங்களில் கூறப்படும் புவனங்களோ 224. இதுபோல சாங்கிய யோகங்களில் சொல்லப்படுவனவாகிய தத்துவங்கள் சில. அவற்றிற்கு வேறுவன எல்லாம் சிவ சாஸ்திரங்களில் பெறப்படுவன, ஸ்ரீ கண்டபாஷ்யத்தில்,

वयं तु वेद शिवागमयोः भेदं न पश्यामः। वेदेऽशिवागम इति व्यवहारो युक्तः तस्य तत्कर्तृकत्वात् । अतः शिवागमो द्विविधः त्रैवर्णिक विषयः सर्ववण विषयश्चेति । वेदः त्रैवर्णिक विषयः सर्ववर्ण विषयश्चान्यः। उभयोः एक एव शिवः कर्ता,

நாமோ வேதசிவாகமங்களுக்குப் பேதம் காண்கிலம். வேதத்தின் கண்ணும் சிவாகமம் என்னும் பெயர் வழங்குவது பொருத்தம். அது சிவனைக் கர்த்தாவாக உடைமையால்; ஆதலால் சிவாகமம் இரண்டு விதம். திரைவர்ணிக விஷயம் சர்வவர்ண விஷயம் என. வேதம் திரைவர்ணிக விஷயம். சர்வ வர்ண விஷயம் சிவாகமம், (சிவாகமம்) இரண்டற்கும் சிவன் ஒருவனே கர்த்தா என்று நீலகண்டாசாரியரால் கூறப்பட்டிருப்பதாலும் இரண்டும் ஒன்று. ஆனால் வேதம் அபக்குவாதிகாரி விஷயம். சிவாகமம் பக்வாதிகாரி விஷயம்; ஆதலால் வேத சித்தாந்த சைவாகமங்கள் சர்வோத்தமங்கள் என்று அந்த பாஷ்யகர்த்தர் தமது முடிபை நிலையிட்டருளினார்.

இவ்விஷயத்தை, ஆரண நூல் பொது சைவ மருஞ்சிறப்பு நூலாம் நீதியினாலுலகர்க்குஞ் சத்திநிபாதர்க்கும் நிகழ்த்தியது. என்னுஞ் சிவஞானசித்தியார் செய்யுளாலும் அப்பொருள் பெறப்படுகிறது.

महान्तो वैदिकामंत्राः सर्वे यागाय मत्कृताः ।
तेषामध्ययनार्थाय सृष्टाश्चैव द्विजातयः ॥
यागस्याऽपि च सिद्ध्यर्थं गावस्ससृजिरे मया ।
हविर्भिस्तत्भवैरेव तैश्च मंत्रै द्विजातयः ॥
मत्प्रीणनाय तन्मूर्तावग्नौ जुह्वति ये नराः ।
दुष्प्रापमन्यैस्ते स्वर्गं लभन्ते नात्र संशयः ॥

मदागमेषु येभक्ताश्चर्या योगक्रिया पराः ।
सारूप्यावधिकामुक्तिस्तेषां सिद्धानसंशयः ॥
ये वैदिकाः पुनर्यागान्निष्कामाः कुर्वतेद्विचाः ।
त्रिविधामपि विन्दन्ति मुक्तिं तेनाऽत्रसंशयः ॥
वेदान्त निरतायेतु ज्ञानिनो वीतकल्मषाः ।
मदागमपरायेच ज्ञानपादे व्यवस्थिताः ॥
उभयेऽपि च विन्दन्ति सायुज्यमति दुर्लभम् ।

— चितंबरमाहात्म्यम्


வைதிகங்களாகிய மஹாமந்திரங்களெல்லாம் யாகத்தின் பொருட்டு என்னுல் செய்யப்பட்டன. அவைகளின் அத்தியயனத்தின் பொருட்டு அந்தணர்களும் பிறப்பிக்கப்பட்டார்கள். யாகத்தினது சித்தியின் பொருட்டுப் பசுக்களும் என்னுல் உண்டாக்கப்பட்டன. அவற்றிலுண்டாவனவாகிய ஹவிசுகளாலும் அந்த மந்திரங்களாலும் என்னைப்ப்ரீதி செய்யும் பொருட்டு என்னுடைய வடிவமான அக்னியில் எவர் ஹோமம் செய்கிருர்களோ அவர்கள் பிறரால் அடைதற்கரியதாகிய சுவர்க்கத்தை அடைகிருர்கள். இதில் சம்சயமில்லை. எனது ஆகமங்களில் எவர்கள் பற்றுடையவர்கள் சரியாக்கிரியா யோக பரர்கள், ஆகிய அவர்களுக்கு சாருப்பாயாவதிகமாகிய முக்தி சித்தம், சம்சயமில்லை. மீட்டும் எந்த வைதிகர்களாகிய துவிஜர்கள் யாகங்களை நிஷ்காமர்களாய்ச் செய்கின்ருர்கள், அவர்கள் சாலோக்யம், ஸாமீபயம், ஸாரூப்பியம் என்னும் மூன்று விதமாகிய முக்த்தியை அடைகின்ருர்கள் இதில் சந்தேஹமில்லை. எவர்கள் எனது ஆகம பரர்களோ! ஞானபாதத்தில் நிலைபெற்றவர்களோ! இவர்களும் கிடைத்தற்கு மிகவும் அரியதாகிய எனது சாயுஜ்யத்தை அடைகின்ருர்கள்.

— சிதம்பரமாகாத்மியம்.

(தொடரும்)

தருமையாதீனத்திற்குச் சொந்தமான

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேஸ்வரசுவாமி தேவஸ்தானம்



திருச்சிற்றம்பலம்

கண்பொலி நெற்றியினான் திகழ்கையிலோர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தரு செஞ்சடை வேதியனார்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத்தாடகை யீச்சரமே. — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

# திருப்பனந்தாள் மகாகும்பாபிஷேகம்

எங்கும் நிறைந்த பரம்பொருளாகிய இறைவன் உயிர்களை உய்விக்க வேண்டும் என்ற பெருங்கருணையினால் உருவமும் பெயரும் தாங்கி எழுந்தருளியிருக்கும் இடங்களே ஆலயங்கள் எனப்படும். பசுவினிடம் பாலை அதன் மடி வழியாக நாம் பெறவேண்டும். இம்முறையில் நம்நாட்டில் பல ஆலயங்கள் இருக்கின்றன. அவற்றுள், சோழவளநாட்டில் காவிரியின் வடகரையில் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளின் தேவாரத் திருப்பதிகம்பெற்ற சிவதலமாகிய திருப்பனந்தாள் ஸ்ரீ செஞ்சடையப்பர் ஆலயமும் விளங்குகின்றது. இத்திருக்கோயில் தருமையாதீனத்து இருபத்தேழு திருக்கோயில்களில் ஒன்று. நாடு நலம்பெற திருக்கோயில்களில் நித்திய நைமித்திக பூசைகள் நன்கு நடைபெறுதல் வேண்டும்.

தாடகையீச்சரம் என்னும் பெயரால் திருப்பதிகங்களில் போற்றப்பெறும் இச்சிவதலம் அம்பிகை அருந்தவமியற்றி சிவபிரானிடம ஞானோபதேசம்பெற்ற சிறப்புக்குரியது. தாடகை என்னும் பெண் இறைவனை வழிபடும்போது அவளது மேலாடை நெகிழ அவள் அன்பிற்கு நெகிழ்ந்த பெருமான் தலைசாய்த்து கையில் இருந்த திருமாலையை ஏற்றுக்கொண்டான். தாடகை வழிபட்டு அருள்பெற்ற காரணத்தால் தாடகையீச்சரம் என்ற பெயருடன் வழங்குகின்றது இத்திருத்தலம்.

தாடகையின் அன்பிற்குத் தலைசாய்ந்த சிவலிங்கத் திருவுருவைப் படைபலம் கொண்டு நிமிர்க்க முயன்றான் சோழ மன்னன் ஒருவன். அம்மன்னன் முயற்சி வெற்றிபெறவில்லை. இதையறிந்த குங்குலியக்கலய நாயனார் இத்தலத்திற்கு வந்து "நண்ணிய ஒருமை அன்பின் நாருறு பாசத்தாலே" சிவலிங்கத் திருவுருவை நிமிர்த்து நிறுத்தினார். தாடகையின் அன்பு இறைவனைத் தலை சாய்க்க வைத்தது. குங்குலியக்கலயரின் அன்பு அப்பெருமானை நிமிர்த்தியது.

இவ்வாறு பல சிறப்புக்களுக்கு உரியதும் நாககன்னிகை, ஐராவதம் வழிபட்டு அருள் பெற்றதுமாகிய இத்திருத்தலம் மண்ணியாற்றங்கரையில் அமைந்து விளங்குகின்றது. இத்திருக்கோயிலில் இதற்குமுன் திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களால் பலமுறை திருப்பணிகளும், அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகங்களும் செய்விக்கப்

பெற்றன. இதுபொழுது 25ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆட்சிக் காலத்திலும் இராஜகோபுரம், கட்டைக் கோபுரம், அம்பாள் கோபுரம், விநாயகர், சுவாமி, அம்பாள் முதலியவற்றின் கற்பக்கிரக விமானங்கள் முதலியன சுதை வேலைகள், சிற்ப வேலைகள், வண்ண ஓவியங்கள் முதலியவற்றுடன் சுமார் 5 லட்சம் செலவில் திருப்பணி நிறைவேறியது. அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 5—7—68 வெள்ளிக்கிழமை சுவாதி நட்சத்திரம் கூடிய நன்னாள் காலை 9-30 மணி அளவில் சிம்ம லக்னத்தில் நடைபெற்றது.

2—7—68 செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணி அளவில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருப்பனந்தாளுக்கு எழுந்தருளினார்கள் திருப்பனந்தாள் கட்டளை மடத்தில் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், இளவரசு வித்துவான் ஸ்ரீமத் முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களை முறைப்படி வரவேற்று வழிபட்டார்கள். ஆதீனத் திருமடத்திலும் திருககோயிலிலும் பணியாற்றி வருகின்றவர்கள் அனைவர்க்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் புத்தாடைகள் வழங்கியருளினார்கள். பின்னர் மாலை 6 மணி அளவில் அடியார்குழாங்களோடு திருக்கோயிலுக்கு எழுந்தருளி சுவாமி, அம்பாள், பரிவாரங்கள் ஆகிய மூர்த்திகளைக் கலாகர்ஷணம் செய்வித்து யாகசாலைக்கு எழுந்தருளச் செய்தார்கள். சென்னை டாக்டர் திரு. இரத்தினவேல்சுப்பிரமணியம் அவர்கட்கும், சிதம்பரம் டாக்டர். திரு. K. அரங்கசாமிபிள்ளை அவர்கட்கும் பொன்னாடை போர்த்தி ஆசிவழங்கியருளினார்கள்.

3—7—68 புதன் அன்றும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும் இளவரசும் உடன்வர யாகசாலை பூரணாகுதி வழிபாட்டிற்கு எழுந்தருளி வழிபட்டார்கள். பெருமானுக்கு அஷ்டபந்தனமும் ரஜதபந்தனமும், அம்பிகைக்கு அஷ்டபந்தனம் சுவர்ணபந்தனம், ரஜதபந்தனங்களும் நவரத்தினங்களிட்டும் பந்தனம் சேர்த்தருளினார்கள்.

4—7—68 வியாழன் காலையில் பரிவார மூர்த்திகளின் மகாகும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. ஸ்ரீ காசிமடம் இளவரசு வித்துவான் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள்

அவர்கள் உடனிருந்து இந்த மகாகும்பாபிஷேகத்தைச் சிறப்புடன் நிகழ்த்திவைத்தார்கள். அன்று மாலை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்களும் யாகசாலைப் பூர்ணாகுதி வழிபாட்டிற்கு எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். சென்னை மாநில அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. ஆ. இராதாகிருஷ்ணன் அவர்களும், தஞ்சைத் துணை ஆணையர் திரு, T. N. சிங்காரவேல் B. A.. B. L. அவர்களும் ஆலயத்தில் நடைபெற்றிருக்கும் திருப்பணிகள் பலவற்றையும் பார்வையிட்டு பூர்ணாகுதி வழிபாட்டில் கலந்துகொண்டார்கள்.

5—7—68 வெள்ளிக்கிழமை அதிகாலை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பனசைக்கு எழுந்தருளினார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசிவாசி அருணந்தி தம்பிரான் சுவாமிகளும் இளவரசு, வித்துவான் ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகளும் கட்டளை மடத்திற்கு எழுந்தருளியிருந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தை வரவேற்றார்கள். பல்லாயிரக் கணக்கான மக்கள் திரள் ஊரெங்கும் நிறைந்திருந்தது. காலை 8 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களும், கோவை பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் மடாலய இளவரசு வித்துவான் ஸ்ரீமத். இராமசுவாமி அடிகளும் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் திரு ஆர். சதாசிவம் அவர்கள், திரு. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள், திரு மீ ப. சோமசுந்தரம் அவர்கள், திருமதி சௌந்தரம் கைலாசம் அவர்கள், தஞ்சை மாவட்ட கலெக்டர் திரு. ரெங்க பாஷ்யம் அவர்கள், தஞ்சை மாவட்டக் காவல்துறை அதிகாரி திரு சுப்பராயன் அவர்கள், அறநிலையத்துறைத் துணை ஆணையர் திரு. N. சிங்காரவேல் முதலியோர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடன் மகாகும்பாபிஷேகத்தைத் தரிசிக்க வருகை புரிந்தனர். யாகபூஜை பூர்ணாகுதி வழிபாடு சிறப்புற நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அன்பர் பலருக்கும் தலவரலாற்றுச் சின்னம் பொறிக்கப்பெற்ற வெண்பொற் பதக்கத்தை (பெண்டண்ட்) அணிவிக்கச்செய்து பொன்னாடை போர்த்தி ஆசி அருளினார்கள். பின்னர் யாகசாலையில் இருந்து கடங்கள் எழுந்தருளி வலமாக சென்றன காலை 9-30 மணியளவில் அன்பர்களின் அரஹர முழக்கத்துடனும் வேத சிவாகம பாராயணம், திருமுறைப் பாராயணங்களுடன் மங்கல கீதங்கள் முழங்க ஸ்ரீ செஞ்சடையப்பருக்கும், பெரியநாயகி அம்மைக்கும் மகா கும்பாபிஷேகம்

மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. மகாபிஷேகத்திற்குப் பின்னர் பெருமானுக்கு பஞ்சமுகார்ச்சனை அம்பிகைக்கு நவசக்தி அர்ச்சனைகளும் நடத்தப்பெற்றன.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் முறைப்படி வழிபாடுகளை முடித்துக்கொண்டு மங்களவாத்தியம் முழங்க காசிமடத்திற்கு எழுந்தருளினார்கள். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் முறைப்படி மகாசந்நிதானம் அவர்களை வரவேற்று உபசரித்து வழிபட்டார்கள். மாகேசுவரபூஜை, ஏழைகளுக்கு அன்னம்பாலிப்பு முதலியன சிறப்பாக நிகழ்ந்தன.

மகாகும்பாபிஷேகத்தை ஒட்டி திருக்கோயிலின் பல பகுதிகளிலும் அன்பர்கள் தங்கி வழிபட்டு இன்புறும் வகையில் காவணம் அமைக்கப்பெற்றிருந்தது. யாகசாலை மிகச்சிறப்பாக அலங்கரிக்கப்பெற்றிருந்தது. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள், ஒவ்வொரு நாளும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களை வழிபாட்டிற்குப் பின்னர் ஸ்ரீகாசிமடத்திற்கு எழுந்தருளச்செய்து பூஜைசெய்து வழிபாடாற்றினார்கள் திருக்கோயில் கும்பாபிஷேகத்திற்கு எல்லா மூர்த்திகளுக்கும் அஷ்டபந்தன மருந்து சாத்துவதற்கு அஷ்டபந்தன மருந்து அளித்தருளி கும்பாபிஷேக விழா நாட்களில் சிவாசாரியார்களுக்கும் ஓதுவா மூர்த்திகளுக்கும் வேத பிராம்மணர்களுக்கும் அன்னம்பாலிப்பு செய்தருளினார்கள்.

தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் திருமுறை வாணர்கள் வந்திருந்தனர். 2–7–68 தொடங்கி 5–7–68 முடிய திருமுறை அகண்ட பாராயணம் தொடர்ந்து நடைபெற்றது. வேதசிவாகம பாராயணங்கள் முறைப்படி நடைபெற்றன. அன்பர்கள் ஓதியுணர்ந்து வழிபட தலத்திருப்பதிகம், தல வரலாற்றுச் சிறப்பு முதலியன அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன. ஆதீனம் அலுவலர்களும், தேவஸ்தானப் பணியாளர்களும் இந் நான்கு நாட்களிலும் திருப்பனந்தாளில் தங்கி கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறத் தொண்டாற்றினர். கும்பாபிஷேகத்திற்காகக் கோயில் முகப்பில் அமைக்கப்பெற்றிருந்த பந்தல் முகப்பு மிக உயர்ந்து பொலிவுடன் விளங்கியது. அதை மேலும் பொலிவுறச் செய்தன மின் விளக்குகள்.

# செய்திகள்

திருப்பனந்தாளில்

## திருமுறை மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் 5—7—68ல் நிகழ்ந்த மகாகும்பாபிஷேகத்தையொட்டி 2—7—68 செவ்வாய்க்கிழமை முதல் திருமுறை மாநாடு நிகழ்ந்தது. மாநாட்டிற்காக அமைதியான ஒரு இடத்தில் காவணம் அமைக்கப்பெற்றிருந்தது. மாநாட்டு நிகழ்ச்சி 2—7—68 மாலை 7 மணி அளவில் தொடங்கியது. முதல்நாள் திருஞானசம்பந்தர் திருநாளாக அமைந்திருந்தது. முதலில் சீகாழி திரு. S. திருஞானசம்பந்தம், வேலூர் திரு. K. சொக்கலிங்கம் குழுவினரின் திருமுறை இசையரங்கு நிகழ்ந்தது. பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி மாநாடடைத் தொடங்கிவைத்து ஆதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய "ஆசையறுய் பாசம் விடாய்" என்ற பாடற்பொருளை விளக்கித் திருமுறை ஓதுவதின் இன்றியமையாமையை எடுத்துக்கூறி வாழ்த்துரை வழங்கியருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாட்சியேற்றது முதலாகத் தருமையாதீன மேற்பார்வையிலுள்ள இருபத்தேழு திருக்கோயில்களிலும் திருப்பணிசெய்து செப்பனிட்டு குடமுழுக்குவிழா நிகழ்த்திவருகின்றார்கள். இருபத்தேழு நட்சத்திரங்களைப்போல அவை சிறந்து விளங்குகின்றன. கும்பாபிஷேக காலங்களில், இருபத்தேழு ஆசிரியர்களால் அருளப்பெற்ற திருமுறைகளைப் பரப்பத் திருமுறை மாநாடுகளை அமைத்துத் திருமுறைகளின் பொருள்விளக்கங் காணச்செய்து வருகின்றார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருப்பணி மக்களை அருள்வாழ்வில் ஈடுபடச் செய்கின்றது என்று கூறித் தொடக்கவுரை நிகழ்த்தினார்கள். சிவநாம சிந்தனை என்றும் எல்லோர் உள்ளத்திலும் நிலைத்திருக்கவேண்டும் என்று சொல்லி சிவசிவ நாம முழக்கம் செய்யச்செய்தார்கள்.

சென்னை டாக்டர் திரு ரெத்தினவேலு சுப்பிரமணியம் அவர்கள் தலைமையுரையின்போது தேவார திருவாசகங்களைப் படிப்பதால் இரத்தக்கொதிப்பு என்ற நோய் நீங்குகிறது. மேலும் மனதிற்கு அமைதி ஏற்படுகிறது. நோயாளிகளாக இருப்பவர்களுக்கு மன அமைதியே முதலில் இருக்கவேண்டியது. அதைப்பெற தேவார திருவாசகங்களைப் படிக்கவேண்டும். அவற்றின் பொருளை அறியவேண்டும். இவற்றிற்கு வாய்ப்பாக ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுறை மாநாட்டை அமைத்து அதில் பல அறிஞர்களின் சொற்பொழிவிற்கும் ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அதைப் பயன்படுத்தி நாம் உய்யவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். பின்னர் செந்தமிழ்ச்செல்வர், திரு கி. வா. ஜகந்நாதன், தருமையாதீனப் புலவர், திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், திருமதி. ப. நிலா, திரு. வி. சா. குருசாமி தேசிகர் ஆகியோர் திருஞானசம்பந்தர் திருமுறை, சரியைத் தொண்டு இவைபற்றி விரிவுரை நிகழ்த்தினர். இரவு குமாரி கௌரி குழுவினரின் இன்னிசைச் சொற்பொழிவு திருஞானசம்பந்தர் என்ற பொருளில் நிகழ்ந்தது.

3—7—68 புதன் மாலை 6 மணி அளவில் திருமுறை மாநாடு நடைபெற்றது. அன்றையநாள் திருநாவுக்கரசர் திருநாளாக அமைந்திருந்தது. துறைசை திரு. D. சோமசுந்தரதேசிகர், சீகாழி திரு, S. திருஞானசம்பந்தம் குழுவினரின் திருமுறை இசையரங்கு நிகழ்ந்தது. பின்னர் மாநாடு காசிமடம் இளவரசு வித்துவான் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவதிகை திரு. R. ஷண்முகசுந்தரம செட்டியார், திருமதி. காஞ்சனமாலை அம்மையார், திரு. வேங்கடராமையா, M. A., B. O. L. திருக்கோயில் ஆசிரியர், சித்தாந்தப்புலவர்மணி, திரு. N. R. முருகவேள் M. A., M. O. L. ஆகியோர் திருநாவுக்கரசர் திருமுறை, கிரியைத்தொண்டு பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர். அடுத்து பேபி. வனஜா குழுவினரின் இன்னிசைச் சொற்பொழிவு கண்ணப்பர் என்ற பொருளில் நிகழ்ந்தது.

4—7—68 வியாழன் மாலை 6 மணி அளவில் திருமுறை மாநாடு தொடங்கியது. அன்றையநாள் சுந்தரர் திருநாளாக அமைந்திருந்தது. திருநாரையூர் திரு. M. சுப்பிரமணிய முதலியார், திருச்செந்தூர் திரு. S. நமசிவாய முதலியார் குழுவினரின் திருமுறை இசையரங்கு நிகழ்ந்தது. சென்னை இந்து சமய

அறநிலைய ஆணையர் திரு. ஆ. இராதாகிருட்டினன் அவர்கள் M. A, B. L. தலைமையில் தஞ்சைத் துணை ஆணையர் திரு. T. N. சிங்காரவேல் B. A., B. L. அவர்களும், திருமதி. ஜெயகுமாரி பாஸ்கரன், திரு சொ. சிங்காரவேலனர் எம். ஏ. டிப்-லிங்., வித்துவான், திரு. எம். சுந்தரேசம் பிள்ளை முதலியவர்களும் சுந்தரர் திருமுறை, யோகத்தொண்டு இவைபற்றிச் சொற்பொழிவு ஆற்றினர். இரவு 9 மணி முதல் வேலூர் சப்-இன்ஸ்பெக்டர் திரு. குணபூஷணம் அவர்களின் இன்னிசைச் சொற்பொழிவு சுந்தரர் என்ற பொருளில் நிகழ்ந்தது.

5—7—68 வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் மாநாடு தொடங்கியது, அன்றையநாள் மாணிக்கவாசகர் திருநாளாக அமைந்திருந்தது தருமபுரம் சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதன், திருபுவனம், திரு. S. சிவப்பிரகாசம் குழுவினரின் திருமுறை இன்னிசையரங்கு நிகழ்ந்தது. பின்னர், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. R. சதாசிவம் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினர்கள். தவத்திரு. இராமசாமி அடிகளார் அவர்கள் வாழ்த்துரை கூறினர்கள். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார், திரு. மீ. ப. சோமசுந்தரம், திருமதி. சௌந்தரம் கைலாசம், திரு. S. சத்தியசீலன், M. A., திரு. வி. சபேசன் ஆகியோர் எட்டாந் திருமுறை, ஞானத்தொண்டு இவைபற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர். இரவு 8-மணிக்குப் பவானி திரு. கண்ணப்பர் குழுவினரின் இன்னிசைச் சொற்பொழிவு மாணிக்கவாசகர் என்ற தலைப்பில் நிகழ்ந்தது.

நாள்தோறும் சென்னை சமயப்பிரசார நிலையம் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், வரவேற்புரை நன்றியுரை கூறி மாநாட்டை உடனிருந்து நடத்தினர்கள். இவ்வாறு நான்கு நாட்கள் மிகச்சிறப்பாகத் திருமுறை மாநாடு நிகழ்ந்து நிறைவுபெற்றது.

# எதிர்காலம் - திரு. K. முத்துஜோதிடர்

( கீலகஹூ ஆடிமீ 1௨ முதல் 31௨ முடிய )

(16—7—68 முதல் 15—8—68 முடிய)

கீலகஹூ ஆடிமீ தக்ஷிணாயன புண்ணிய காலம். 1௨ (16—7—68) ஸப்தமியும் உத்திரட்டாதி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் ஸ்ரீ சூரிய பகவான் உலக க்ஷேமத்தின் பொருட்டு கடகராசிக்கு கடக லக்னத்திலேயும், தனது ஹோர காலத்தி லும் உதயாதி 2 நாழிகை 35 வினடிக்கு ப்பிரவேசம் செய்வ தால் உலகெங்கும் சுபிக்ஷம் ஏற்பட்டு பிரஜைகள் சந்தோ ஷத்துடனும் தன தான்ய சமிருத்தியுடனும் ஆஸ்திக புத்தியோடு தான் செய்யவேண்டிய கடமைகளைச் சரியாய் செய்து கடவு ளுக்கு அர்ப்பணம் செய்துகொண்டு ஈதிபாதைகளால் சிரமம் ஏற்படாமல் இல்லற சுகபோகங்களை அடைவார்கள். உலகம் (தென்பாரதம்) செழிக்கும். எங்கும் தெய்வபலம் முன்னின்று காக்கும். சுபமுண்டாகும்.

## 1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். தீர்த்த யாத் திரையும் ஜீவன நிமித்தம் இடம் மாறுதலும் பந்துமித்ரா ளுடைய சேர்க்கையும் உண்டாகும். வெகுகாலமாக நடை பெறாத காரியங்கள் நடைபெறும். செவ்வாய், புதன் சுப மாகும்.

## 2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

விருஷபராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். இல்லறம் ஓங்கும். வம்சாவிருத்தி ஏற்படும். நூதனமான பிரபு தரி சனமும் பந்துமித்ரர்களால் உபகாரமும் ஏற்படச்செய்யும். தொழில் ஓங்கும். நல்ல பெரியோர்களின் சேர்க்கையும் ஏற் படச்செய்யும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**3. மிதுனம் - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$, திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$**

மிதுனராசி 9 பாதங்களும் உத்தமமான எதிர்பாராத நல்ல பலன்களையே கொடுத்துக்கொண்டு இருக்கும். இல்லறம் நடத்தக்கூடிய ஸ்திரி புருஷர்களுக்கு விசேஷமான சுகபோக போக்கியங்களைத்தரும். உலகத்தில் மதிப்பும் ராஜாங்க பத்திரமும் ஏற்படச்செய்யும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**4. கடகம் - புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்**

கடகராசி 9 பாதங்களும் ஜெயத்தையும் லாபத்தையும் தரும். விவசாயம் ஓங்கும். கிரய விக்கிரயங்களால் விசேஷ லாபத்தை உண்டுபண்ணும். இல்லறசுகம் ஓங்கும். நஷ்டமான பொருள்கள் தானுக வந்து சேரும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

**5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$**

சிம்மராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வரவு செலவு சமனுகும். சகல காரியங்களும் தவக்கத்தோடு நடக்கும். ஜீவனலாபம் ஏற்படும். ராஜாங்க உபகாரமும் மேலோர் பெரியோர்களுடைய உபகாரமும் உண்டாகும். குடும்பம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

**6. கன்னி - உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$**

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். சகல காரியங்களும் தவக்கத்தோடு நடைபெறும். செலவினங்கள் அதிகமாகும். எதிர்பாராத பெரிய காரியங்களைச் சாதித்து உலக பிரசித்தியை உண்டுபண்ணும். ஆரோக்கியக்குறைவு காட்டும். குடும்பத்தில் தொல்லை அதிகமாகும். ஆனுலும் தெய்வபலம் முன்னின்று காக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

**7. துலாம் - சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$**

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரமாகவே நடக்கும். வரவு செலவு சமனுகும். இல்லறசுகம் ஓங்கும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்களில் மாறுதல்களும் கட்டிட வேலைகளும் ஏற்படும்.

குடும்பத்தினர்களால் நன்மை ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையே தரும். தனதான்ய சமிருத்தியும் கட்டிடங்களும் உண்டாகும். இல்லறவாழக்கை ஓங்குப. தொழில் மூலமாக எதிர்பாராத லாபம் ஏற்படும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். சுபசோபனுதிகள் ஏற்படும். செவ்வாய், புதன் சுபமாகும்.

## 9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். வரவு செலவு சமனாகும். சுபசோபனுதிகள் மூலம் அதிமான விரயம் ஏற்படச்செய்யும். கடன் நிவர்த்தியாகும். நஷ்டமான பொருள் வந்துசேரும். தொழில் ஓங்கும். தெய்வபலம் காக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். தொழில்மூலம் அடிக்கடி அலைச்சல்கள் ஏற்படும். பலவிதமான மாறுதல்களும் காட்டும். லாபம் உண்டாகும். மேலோர் பெரியோர்களின் அன்பினுல் சகலமும் சாத்தியமாகும். ஆரோக்யம் உண்டுபண்ணும். சனி, ஞாயிறு சுபமாகும்.

## 11. கும்பம்-அவிட்டம் ½, - சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும், மிச்ரமான பலனைத்தரும். மனம் சஞ்சலம் அடையும். ஸ்திர புத்தியாக இருக்காது. தூர தேசத்திலிருந்து சந்தோஷகரமான செய்திகள் வரும். பந்து மித்திராதிகளால் அனுகூலம் உண்டாகும். இல்லறம் ஓங்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனையே தரும். வரவு செலவு சமனாகும். அதிகத் தொல்லைகளைக் கொடுக்கும். ஆரோக்யம் உண்டுபண்ணும். சஞ்சார பலன் ஏற்படும். உலக பிரசித்தியை உண்டுபண்ணும். தேவ கோபம் நீங்கும். தெய்வ பலத்தால் சகலமும் சுபமாகவே நடக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

குறிப்பு: ஷை ஆடி மாதத்தில் சூரிய சங்கிரமணம் சுப வேளையில் ஏற்படுவதால் எதிர்காலத்தில் தக்ஷிணாயணத்தில் காட்டககூடிய பக்ஷாவசான கிரகணம் சிம்மம், கன்னி, மீன ராசிகளில் சஞ்சரிக்கக்கூடிய குரு, செவ்வாய், கேது, சனி முதலியவர்களின் சஞ்சாரத்தால் தெரியவரும். பயங்கள் எல் லாம் ஒருவாறாக விலகி பெரியோர்களின் தபோபலமும், தேவ தாராதனைகளின் பலமும் சேர்ந்து முன்னின்று முக்கியமாக (தென்பாரதத்தை) காக்கும். தென்தேசம் செழிக்கும். உலகம் பூராவையுமே காவேரி தீரம் ரக்ஷிக்கும்.

---


### "ஞானசம்பந்தம்"

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சமயப் பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**ஆண்டுக் கையொப்பம்.**

உள்நாடு ரூ. 3—00. வெளிநாடு ரூ. 4—00

செயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுரம். மாயூரம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்.